# தமிழ்ப் பொழில்

## தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

747

[illegible] : 68 மலர் : 6

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு-2024

துணர் : 68 பவ - புரட்டாசி மலர் : 6

அக்டோபர் 1994

## உள்ளுறை

1] திருமுருகாற்றுப்படையில் அடியார் திறம் ... 770
(சென்ற இதழ் தொடர்ச்சி)
டாக்டர் ந. கந்தசாமி

2] பழைய தஞ்சை மாவட்டத்துப் புதிய கதையாசிரியர்கள் ஓர் அறிமுகம் ... 775
(சென்ற இதழ் தொடர்ச்சி)
டாக்டர் இரா. சண்முகவேலன்

3] புதிய தொல்காப்பியம் என்னும் புற்று நோய் ... 783
முனைவர் பா. இறையரசன்

4] சிலப்பதிகாரத்து இசையிலக்கணம் அரங்கேற்று காதை ... 787
(சென்ற இதழ் தொடர்ச்சி)
டாக்டர் வீ. ஜி. கிருஷ்ணமூர்த்தி

5] பழமலயின் கவிதை உலகம் ... 797
தெ. திருஞானமூர்த்தி

6] தொல்காப்பியம் எழுத்து, சொல் புதிய உரை பற்றிய மதிப்பீடு ... 808
முனைவர் சோ. ந. கந்தசாமி

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

# தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்

திரு. த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைச் தமிழ்ச் சங்கம்

திரு. கலைமாச்செல்வர் எஸ். டி. காசிராஜன், ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை,
சென்னை.

திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம் ஏ., பி. டி., பி. எல்., பிஎச். டி.
முன்னாள் இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

திரு. முனைவர் சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ. எம். லிட். பிஎச். டி.
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சை.

திரு. முனைவர் தமிழண்ணல், எம். ஏ , பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.
'ஏரகம்' 4/384, சதாசிவநகர், வண்டியூர்வழி,
மதுரை-625 020.

திரு. முனைவர் மு. கோவிந்தராசன்,
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

திரு. முனைவர் சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட்., பி எச் டி.
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்

திரு. முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

திரு. தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை, பி. ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு. முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ் முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

திரு. பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு. புலவர் செ. இராசு, எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

திரு. புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்., பிஎச். டி.
துணை முதல்வர், த். உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., எம். எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரமேனிலைப்பள்ளி

திரு. முனைவர் பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்., பிஎச். டி.
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

சென்ற இதழ் தொடர்ச்சி

# திருமுருகாற்றுப்படையில் அடியார் திறம்

*டாக்டர்* **ந. கந்தசாமி,**
இந்திய ஆய்வியல் துறை
மலாயப் பல்கலைக் கழகம் கோலாலம்பூர்.

இவ்விரண்டும் பேய் மகளுக்குக் காதணி போல் உள்ளன. அவளுடைய பெரிய வயிறு சருச்சரை உடையது. கண்டார் நடுங்குதற்கு ஏதுவான அச்சம் பொருந்திய நடையினையும் தோற்றத்தையும் உடையவள். செத்த பிணங்களின் உடம்புகளைக் கீரியதால் குருதி சிந்தும் நகத்தினால் கண்களைத் தோண்டி உண்ணப்பட்ட முடை நாற்றம் வீசும் கபாலத்தினைக் கையிலே தாங்கி முருகன் போர் புரிந்த வெற்றிக்களத்தின் சிறப்பினைப் பாடிக்கொண்டும் தோளை அசைத்துக்கொண்டும் வாயால் பிணத்தை தின்று தின்றுகொண்டும் துணங்கைக் கூத்தை ஆடுகின்றாள். இவ்வாறு இவள் பசிதீர்ந்து போர்க்களத்தில் ஆடும் வகையில் முருகன் அவுணர்களை அழித்தனன். இக்குறிப்பினால் அச்சம் தரும் பேய் இனங்கூட முருகனிடத்தில் தன் பசி தீர்த்தலாகிய தன்னலம் கருதி அன்பு கொண்டிருந்தமை அறியப்படும். நக்கீரர் வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா''[38] என்று, கூறுதலால் முருகனின் வெற்றிக்களம் அப்பேய் மகளின் பாடல் ஆடல்களுக்குக் கருப்பொருளாக அமைந்தது எனலாம். இவள் ஆடும் துணங்கைக் கூத்தினை, ''பழுப்படை இருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்.'' என திவாகரம் விளக்கம் தருகிறது.

குறிஞ்சிப் பெண்களாயினும் பேய் மகளாயினும் அவர்கள் வழிபாட்டில் ஆடல் முக்கியத்துவம் பெறுதலை சிறப்பாகச் சுட்டுதல் தகும்.

## விண்ணவரின் பக்திநிலை

ஆறாவது வரிசையில் கந்தர்வரும் அவர்தம் மகளிரும், தெய்வங்களும், தேவர்களும் இடம்பெறுவர். இவர்களுள் முதற் கண் கந்தர்வர்களையும் அவர்தம் மகளிரையும் குறித்து வரும் செய்திகளை ஆராய்வோம்.

கந்தர்வர்கள் ஆணும் பெண்ணுமான இரட்டையராய்க் கையில் யாழ் வைத்துக் கொண்டு இசைபாடும் இயல்பினர். புகையை முகந்தாற் போன்ற மாசற்ற ஆடையை உடுத்தியவர் மாலைசூடிய மார்பினர். நுண்ணிய செவிப்புலனால் இசையை அளந்து நரம்பைக் கட்டிய சுற்றுதல் உறும் கச்சினையுடைய நல்ல யாழின் இசையில் பயிற்சி பெற்ற விழுமிய உள்ளத்தினால் எஞ்ஞான்றும் மென்சொல் பேசுதல் இவர்தம் இயல்பு. இவர்கள் அந்தரத்தில் இயங்குபவர். இவர்கள் திருவாவினன்குடியில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானை வழிபட வேணவாக் கொண்டு முருகனைப் போற்றும் திறனைத் திருமுருகாற்றுப்படை சுட்டுகிறது.[39]

கந்தர்வப் பெண்கள் நோயற்ற உடலினர். மாந்தளிர் போன்ற மேனியர். ஒளிவீசும் பொன்போன்ற திதலை (தேமல்) யை உடையவர். மேகலை அணிந்த அல்குலையும் உடையவர்கள். மாசற்ற காட்சியினர். மேகலை ஆடரணம் இவர்தம் இடையினை அழகு செய்யும் இவர்கள் மாசு மறு அற்றவர்கள். இவர்களும் தம் தலைவர்களுடன் ஆவினன்குடியில் கோயில் கொண்டுள்ள செவ்வேளை வழிபட வருவர்

### தேவர்கள்

அடுத்த நிலையில், திருமால், உருத்திரன், இந்திரன் முதலிய தெய்வங்கள் முருகக் கடவுளைக் கண்டு அருள்பெறும் பொருட்டுத் திருவாவினன்குடிக்கு எழுந்தருளும் கொள்கையினர் என்பதை நக்கீரர் தெளிவாகப் பாடியுள்ளார்.

### திருமால்

முருகனைக் கண்டு தரிசிக்க வரும் தெய்வங்களில் திருமால் முதலில் சுட்டப் பெறுகிறார். நஞ்சுடன் உறைக்குள் கிடந்த துயிலினை உடைய வெண்பற்களை உடையனவும், தீயைப் பொழிவது போலும் நெடுமூச்சு விடுவனவும் ஆகிய பாம்புகளும் திருமாலிடத்தில் காட்சி தரும். அப்பெருமானின் கையில் பாம்புப் பகையாகிய கருடக்கொடி விளங்கும். இத்தகைய கோலத்துடன் திருமால் முருகனை வழிபடும் பொருட்டு ஆவினன்குடிக்கு வருதலை நக்கீரர் சிறப்பாகப் பாடியுள்ளார்.[40]

## உருத்திரன்

மும்மூர்த்திகளில் ஒருவராகிய உருத்திரன் இடபக்கொடியை வெற்றிக் கொடியாக வலக்கையில் தாங்கியுள்ளார். பலரும் புகழும் திண்ணிய உமையம்மையை இடப்பாகத்தில் உடையவர். இமையாத முக்கண்ணினர். முப்புரத்தை எரித்தவர். முரண் மிக்கவர். இவரும் ஆவினன்குடியிலுள்ள முருகனை வணங்க வருகிறார்.

## இந்திரன்

இந்திரன் வானவர் தலைவன், ஆயிரம் கண்களை உடையவன், நூறு யாகங்களைப் புரிந்து பெரிய பகைவரைக் கொன்று வெற்றியினை உடையவன். நான்கு உயர்ந்த கொம்புகளையும் அழகிய நடையினையும் உடைய ஐராவதம் என்னும் யானையை ஊர்தியாக உடையவன். இவனும் முருகனை வழிபட ஆவினன்குடி வருகிறான். [42]

## ஏனைய தேவர்கள்

பிரமன், திருமால், உருத்திரன், இந்திரன் என்ற பெருந் தெய்வங்கள் நால்வரில் உலகைக் காக்கும் கொள்கையை-யுடைய மேற்குறித்த மூவரும் (அயன் நீங்கலாக) தொடர்ந்து தம் தொழில்களை நிகழ்த்தித் தலைவராக வேண்டி இம்-மண்ணுலகில் வந்து தோன்றி, திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய நான்முகனை விடுவிக்கக் கருதித் திருமவாவினன் குடியில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானை வழிபட வருகின்றனர். [43] இவர்கள் வருகையை முன்னறிவிப்பதைப்-போல ஏனைய தேவர்களும் வருகின்றனர். [44] இவர்கள் குற்ற-மற்ற அறிவினை உடையவர்கள். நான்கு வகையான வேறுபட்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் ஆகிய தேவர் முப்பத்துமூவரும் (இவர்களுடன் பதினெண் தேவகணத்த-வரும் உள்ளனர்) முற்குறித்த பெருந்தெய்வங்களுடன் முருகனை வழிபட்டு நான்முகனைச் சிறைவிடுத்து விண்ணகத்தை விளங்கச்

செய்ய ஆவினன்குடிக்கு வருகின்றனர். இவர்கள் விண்மீன்கள் மலர்ந்தாற் போன்ற தோற்றத்தை உடையவர்கள். காற்றுப் போன்று விரைந்த செயலினை உடையவர் காற்றிடைத் தீ தோன்றினாற் போன்ற ஆற்றலுடையவர்கள். இடிஇடித்தாற் போன்ற குரலினர். தமக்கு இடும்பையாய் உள்ள குறையை முருகனிடம் முறையிட்டு நிறைவுபெற, வானத்தில் வட்டமிட்டுச் சுழலும் தன்மையர். இவர்கள் கண்டு வணங்கும் வகையில் தெய்வானைப் பிராட்டியுடன் முருகன் ஆவினன் குடியில் கொலுவீற்றிருக்கிறான்.

மேற்குறித்த ஆறு வகையான பக்தர்களும் முருகனைப்புகழ்ந்து போற்றித் தத்தம் வேண்டுகோள்கள் நிறைவேற்றப் பெறுதலின், ''பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே'' [45]

என்று நக்கீரர் பாராட்டிப் பரவினர் எனலாம்.

## முடிவுரை

சங்க காலத்தில் தோன்றிய ஆற்றுப்படை இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படை தனித்தன்மை வாய்ந்தது. இப்பனுவலின் ஆசிரியர் நக்கீரர் சிறந்த புலமை நலமும் பக்தி உணர்ச்சியும் கனிந்தவர். ஆறுபடைவீடுகளிலும் முருகன் காட்சி கொடுத்து அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் திறத்தினை அழகுறப் பாடியுள்ளார். சங்க காலத்து மக்களின் சமய நம்பிக்கைகளையும் கடவுட் கொள்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் அறிவதற்குத் திருமுருகாற்றுப்படை சிறந்த ஆதாரமாகத் திகழ்கிறது. முருகனை வழிபடும் அன்பர்களை ஆறு வகையாக அடைவு செய்து அவர்களின் பக்தி உணர்வினைப் பாங்குறப் பாடியுள்ள நக்கீரரின் ஆற்றலை இவ்வியல் தெளிவுறுத்துகிறது.

1. முருகு. 4
2. முருகு. 4
3. பரி. 4:2
4. முருகு. 221
5. முருகு. 248-249
6. முருகு. 270
7. முருகு. 271
8. கலித்தொகை, 1:1 உரை காண்க
9. முருகு. 94-96
10. முருகு. 263
11. முருகு. 177-189
12. முருகு. 107
13. முருகு. 89-90
14. முருகு. 126-137
15. முருகு. 263
16. முருகு. 274

17. புறம். 158
18. முருகு. 273
19. முருகு. 284
20. முருகு. 293-294
21. புறம். 18
22. முருகு. (கழகப் பதிப்பு) பக்கம், 104
23. முருகு. 62-63
24. முருகு. சமதக்கினியார் உரை, பக்கம், 41
25. முருகு. 62-65
26. முருகு. உரைக்கொத்து, பக்கம், 41
27. முருகு. 76-77, 124-125, 175-176, 188-189, 217, 218-250
28. முருகு. 268
29. முருகு. 190-197
30. முருகு. 222
31. முருகு. 227-243
32. முருகு. 228
33. முருகு. 198-205
34. பொ. வே. சோ. உரை காண்க.
35. ,, 12-19.
36. ,, 30-41
37. ,, 45-46
38. ,, 55
39. ,, 138-142
40. முருகு. 148-151
41. ,, 151-154
42. ,, 155-159
43. ,, 160-165
44. ,, 165-176
45. ,, 268

---

சென்ற இதழ் தொடர்ச்சி

# பழைய தஞ்சை மாவட்டத்துப் புதிய கதையாசிரியர்கள் - ஓர் அறிமுகம்

டாக்டர். இரா. சண்முகவேலன்,
தேர்வுநிலைத் தமிழ் விரிவுரையாளர்,
அ· வீ· வா· நி. திருபுட்பம் கல்லூரி (தன்னாட்சி)
பூண்டி - 613503.

## சத்திய சந்தன் [07-4-1961]

திருமருகலுக்கு அண்மையிலுள்ள கோவில் சீயாத்த மங்கையில் பிறந்தவர்; இயற்பெயர் ச· கணேசன்; முப்பத்திரண்டு வயதுக்காரர்· +2 வரை படிப்பு. பணியோ அரசு வேளாண்மைப் பொறியியல் துறையில் இயந்திரக் கலப்பை ஓட்டுநர்; ஓட்டுநராக இல்லாத ஓய்வு வேளைகளில் எழுத்தாளர்· 1990ஆம் ஆண்டு 'கல்கி' சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய 'சுப்பிரமணியன் பி ஏ ,' என்னும் சிறுகதைக்கு முதற்பரிசு கிடைத்தது. அந்த உந்துதல் அடுத்தடுத்த படைப்புகளுக்கு ஊக்கமளிக்க' தெலுங்கு மாத இதழ் ஒன்றில் 'விபுலா' மொழிபெயர்ப்பு வெளிவந்தது. இப்படைப்பாளியை வாசகர் உலகுக்கு அறிமுகப்படுத்திய 'கல்கி'யில் கலைந்த கனவுகள், பங்காளிகள், சக மனிதன் என்பவன் ஆகிய இவருடைய மூன்று சிறுகதைகள் வெளிப்பட்டன· 'செம்மலரில்' பொன்னி, நல்லகாலம் பொறக்குது ஆகிய இரண்டு சிறுகதைகளும் வெளியாயின. மொத்தத்தில், இவர் ஆறு சிறுகதைகளையே எழுதியுள்ளார். 'நேரம் கிடைக்கும் போது மெதுவாக எழுதுகிறேன்' என்கிறார், கல்கி அறிமுகப்படுத்திய புதிய சிறுகதையாசிரியருள் இவரும் ஒருவர் என்கிற பெருமைக்குரியவராகிய சத்திய சந்தன் 'இலக்கியம் மக்களுக்கே!' என்னும்குறிக்கோளுடன் படைத்தல் என்று தன்னுடைய இலக்கியக் கொள்கையையும் படைப்பு நோக்கத்தையும் எடுத்துரைக்கின்றார். தொழிலாளியாகவும் எழுத்தாளியாகவும் விளங்குகிற இப்படைப்புக் கலைஞரின் கதைக்கலையைக் காண வேண்டாமா ?

பொன்னி என்னும் சிறுகதை ஒரு நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த குடும்பத்து உறுப்பினர்களின் உறவைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காட்டுகிறது. பெற்றோர்களின் வளர்ப்பில் இரண்டு பெண்களும், ஒரு பிள்ளையும் எப்படி வளர்கிறார்கள்-வளர்க்கப்படுகிறார்கள் என்பதுதான் கதையினுடைய விரிப்பு. அந்த விரிப்பின் பரப்பில் மூத்த பெண் செயந்தி கல்லூரி மாணவி; வாரந்தோறும் விடுமுறையின் போது வீட்டிற்கு வந்து தங்கி இருந்து விட்டு மீண்டும் கல்லூரிக்குத் திரும்புகிறாள். வீட்டில் தங்கியிருக்கும் பொழுது படிப்பவள் என்கிற மரியாதை, அவளுக்குச் சகல மட்டத்திலும் கிட்டுகிறது. தந்தை அவளைக் கண்டு கொள்வதே இல்லை தாய், கண்மண் தெரியாமல் அவள் மீது செல்லம் பொழிகிறாள். அவள் கேட்டதெல்லாம் கிடைக்கிறது. சிறிய பெண் பொன்னியின் கொலுசை அடகு வைத்துப்பெரிய பெண் ஆசைப்பட்டுக்கேட்ட கைக்கடிகாரத்தை வாங்கி அவளுக்குத் தீபாவளிப் பரிசாகத் தருகிறாள் தாய், வீட்டில் தங்கி வீட்டுக்கல்லூரிக்குப் புறப்படும் பொழுதெல்லாம் தவறாமல் ஐம்பது ரூபாய் கொடுக்கிறாள், வீட்டிலிருக்கும் போது செயந்தி எந்தவீட்டு வேலையையும் தப்பித்தவறிக் கூடத்-தீண்டுவதில்லை. வெளிவாசலுக்கு வந்து நிற்பதும், தெருவில் போகிறவர்கள், வருகிறவர்களுடைய விசாரிப்புகளுக்குப் பதில் சொல்வதும், மணிக்கணக்காகக் கைக்கண்ணாடியைப்-பார்ப்பதும், சதா காலமும் எதையாவது நினைத்துக் கொண்-டிருப்பதும் தான் அவளுடைய வேலைகள்.

பொன்னி, ஐந்தாம் வகுப்பு மாணவி, வீட்டுவேலைகளை யெல்லாம் அவள்தான் பார்க்கிறாள், அக்காவுடன் பேசவும், நெருங்கிப்பழகவும் ஆசைப்படுகிறாள். அவளுடைய அன்பையோ ஆசைகளையோ அம்மாவும் சரி அக்காவும் சரி பொருட்படுத்து வதில்லை, அடகு வைத்த கொலுசைப் பொங்கலுக்குப் போட்டுக் கொள்ளக் கேட்டபோது, அறுவடை ஆகட்டும் என்கிறாள் அம்மா, அக்கா பயன்படுத்தும் பற்பசையும் பிரசும் தனக்கு வேண்டு மென்று கேட்கையில், அக்காவைப்போல் ஆகும் போது வாங்கித் தருவதாகச் சொல்கிறாள்,

செயந்தி தகாத உடலுறவு கொண்டு சூலுற்றதை அறிந்த தாயும் தந்தையும் அவள் மீது வெறுப்புறுகிறார்கள், யாருக்குந் தெரியாமல் கருவைக் கலைத்த பிறகு, கல்லூரிக்குப்போவதை நிறுத்துகிறார்கள். அதற்காகச் செயந்தி அழுகிறாள், வருந்து-கிறாள் புறக்கணிப்பிற்காளான பொன்னி மனந்தாளாமல், தயக்கத்தோடு அக்காவை நெருங்குகிறாள். அக்கா, அவளைக் கனிவுடன் பார்த்துக் கூப்பிட உள்ளம் நெகிழ்கிறாள், வியப்-படைகிறாள்.

> 'அக்கா கூப்பிட்டது என்னைத்தானா' என்று சுத்தும் முத்தும் பார்த்தாள். தன்னைத்தான் என்று நினைக்கையில் பொன்னிக்கு மனசில் குளிர்ச்சியாய் இருந்தது. கண்கள் மிளர்ந்தது. பேச உதடு துடித்தது. அப்படியே அக்காவின் கையைப் பிடித்துக் கொண்டு சாயந்தர நேரத்துல தரிசு வயல்ல ஓடவேண்டும் போலிருந்தது. அம்மாவிடம் சொல்லி அக்காவை நாளைக்கி காலேஜ் போகச் சொல்ல வேண்டும் அப்படியே புதுப் பிரச் வாங்கித் தரச் சொல்லணும் என்று நெனைத்துக் கொண்டே அக்காவிடம் நெருங்கினாள் பொன்னி.

இப்படி முடிகிறது கதை ஒரு சிறுமியின் உள்ளார்ந்த பாசப் பிணைப்பையும் வெள்ளை உள்ளத்தையும், ஆதங்கத்தையும் பொன்னி மிகக் கச்சிதமாகவும் பொருத்தமாகவும் சித்திரம் வரைந்திருக்கிறது. கதைக் கூற்று ஆசிரியர் கூற்றாக இருப்பினும் கொச்சைத் தமிழில்-பேச்சு மொழியில் அமைந்திருப்பதால் நல்ல பொருள் நலிந்த பாத்திரத்தில் இடம்பெற்றிருப்பதுபோல் தோன்றுகிறது ஆசிரியர் கூற்றாகக் கருதாமல் அந்த குடும்பத்து கதையைக் கவனித்த சாதாரண மனிதரின்-கதை சொல்லியின் கூற்றாக எண்ணிக் கொள்ளலாம்.

படித்துப் பி.ஏ. பட்டம் பெற்று நான்கு ஆண்டுகள் கழிந்தும் வேலை கிடைக்காததால் தந்தையாருடைய பொருமலுக்கு அஞ்சி ஊர் சுற்றி அலைந்து வேலை தேடுகிறான் சுப்பிரமணியன்; நாகைக் கடைவீதியில் தன்னுடன் பள்ளியில் படித்த தோழனைக் கண்டு, தன்னுடைய நிலையை எடுத்துச் சொல்லி ஏதேனும் ஒரு வேலை வாங்கித்தர வேண்டுகிறான்.

தோழன் முருகேசன் 'கிளீனா' ராகச் சேர்ந்து லாரி ஓட்டுநராக உயர்ந்தவன். அவன் தன் ஆசானிடம் சுப்பிரமணியை அறிமுகப் படுத்திக் கிளீனர் வேலையை வாங்கிக் கொடுக்கிறான். பெரிய குடும்பத்துச் சுமையை சுப்பிரமணியன் தனது ஓரளவு வருமானத் தினாலாவது தாங்கலாமென்ற எண்ணத்தில் பிடிக்காத தொழிலை பிடித்த தொழிலாக்கப் பயிற்சி மேற்கொள்கிறான். ஒருமுறை நாகையிலிருந்து சென்னைக்கு லாரியில் சென்று வந்தவன், மறு முறை செல்லும் போது தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங் களினால் தன்னுடைய படிப்பிற்கும் அத்தொழிலுக்கும் ஒத்து வராது என்று எண்ணித் தன் லாரி ஓட்டுநரிடம் தான் நின்று கொள்ளப் போவதைத் தெரிவிக்க, அவர் இன்றைய சமுதாய, பொருளாதார நிலமையை எடுத்துரைக்க, வேலையை விட்டு விலகும் எண்ணதை விலக்கிக் கொள்ளத் தீர்மானிக்கிறான். சுப்பிரமணியன் பி ஏ. என்னும் கதை இதுதான்.

பட்டதாரியினது உயர்வு மனப்பான்மை, ஒத்துப்போக முடியாத புதிய சூழ்நிலையில் நெருக்கடியின் காரணமாகச் சிக்குண்டு வெளியேறத்துடிக்கிறது, ஒவ்வாமை நோயினால் கொந்தளிக்கிறது அந்நோய் தீரவேண்டுமானால் தனக்குத் தானே கற்பித்துக் கொண்டிருக்கிற கற்பிதங்களை/கற்பனை களை ஒவ்வொரு படித்த இளைஞனும் கிள்ளி எறிந்து வர்க்கப்-பேதங்களை விட்டொழிக்க வேண்டும். அம்மனப்பான்மை வராத வரையில் - வளராத வரையில் வேலையில்லாத்-திண்டாட்டத்திற்குத் தீர்வே இல்லை. சுப்பிரமணியன் பி.ஏ யின் ஒவ்வாமை நோய்க்குறியை அறிந்து கொண்ட ஓட்டுநர் சங்கரன் பிள்ளையின் ஔடத மொழிகள்' அவனை ஒருநிலைப்படுத்து கின்றன. சுப்பிரமணியன் பி ஏ பட்டதாரி இளைஞர்களினது மனப் போக்கைப் பிரதிபலிக்கின்றவனாக இருந்தாலும், கையூட்டுத் தலைவிரித்தாடும் கால கட்டத்தில் அலுவல் வேலை குதிரைக் கொம்பாகக் காட்சி தரும்பொழுது மாற்று வழியைக் கண்டு பிடித்தவனாகிறான், ஒரு முன்னோடிப் பட்டதாரியாகிறான். அவனது அச்சிந்தனையின் வார்ப்படமே கதைச் சமுதாயச் சிக்கலுக்குச்சத்திய சந்தன் காட்டும் தீர்வு மனமாற்றம்-சமுதாய மாற்றம். எல்லார்க்கும் எல்லாம் என்பதுபோல் எதிர்வரும் காலத்தில் படிப்பாளிக்கு இன்ன தொழில், பாட்டாளிக்கு இன்ன

தொழில், படிக்காதவனுக்கு இந்தத் தொழில் என்கிற வரையறை பகுப்பு முறை இல்லாத ஒரு புதிய சமுதாய அமைப்பு உருவாக்கத்தை-இன்னார்க்கு இன்னது என்கிற விதிமுறை இல்லாத எல்லார்க்கும் எல்லாம் என்பதான ஒருபுதிய சமுதாய உதயத்தை உணர்த்துகிற கதை என்ற அளவில் இக்கதை பாராட்டத்தகுந்தது.

தன்னை இரண்டாந்தாரமாகப் பெண் கேட்டு வந்த நாள் முதல் இரவில் பயங்கரக் கனவுகளைக் கண்டு திடுக்கிட்டு எழுகிறவள் தூக்கமின்மையால் கடந்த காலம், நிகழ் காலம் பற்றியெல்லாம் சிந்தித்துக் குமைகிறாள் முப்பத்திரண்டு வயதான தேவகி, ஒருநாள் இரவு விழிப்பின் போது, வீட்டிற்குள் இருக்க முடியாமல் எழுந்து இரும்பு நாற்காலியைத்தூக்கி வாயில் வெளியில் போட்டுக் கொண்டு அதில் உட்காருகிறாள், வானத்து முழு நிலவைப் பார்த்து அதனைச் சுற்றியிருக்கும் விண்மீன்களை எண்ணுகிறாள், எண்ணிய போது அவளைப் பெண் பார்க்க அது வரையில் வந்துபோனவர்கள் நினைவில் வர, அவர்களையும் எண்ணிப் பார்க்கிறாள். +2 படிக்கும் சிறிய தங்கை அவளை ஒப்பனை செய்யவும், தனியார் தொழிற் கூடத்தில் வேலை செய்யும் மூக்கும் முழியுமான இளையதங்கை தோழியாக அவளைக் கூட்டி வரவும் பார்த்தவர்கள் பெண்ணை விடுத்துத் தோழியை விரும்பவும் பெண் பார்க்கும் படலங்கள் கழிந்திருக்கின்றன அவளுடன் கண்ணியமாகப் பழகும் சக ஊழியன் ஒருவன் அவளுடைய வயதின் முதிர்ச்சியைக் கருதி, அவளை வைப்பாக வைத்துக் கொள்வதாகக் கூறி வளையல்களை உறையில் இட்டு அவளிடம் தருகிறான். வெகுண்டவள் அவற்றைக் குப்பைக் கூடையில் எறிந்து தன்னுடைய மறுப்பையும் வெறுப்பையும் அவனிடம் தெரிவிக்கிறாள், இப்படித் தனது நிலைக்காக இரங்குவதுபோல் காட்டிக்கொள்ளும் தன்னலக் கழுகுகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளத் தனக்கென்று ஒரு குடும்பத்தைக் கற்பனை செய்து அந்த மிதப்பில் மிதக்கிறாள், அந்தக் கற்பனைச் சுகத்தில் சற்று நேரம் தூங்க எண்ணி நாற்காலியைத் தூக்கிக் கொண்டு உள்ளே செல்கிறாள், விளக்கைப் போட்டுப் பார்க்கையில் அவளுக்கு அடுத்த தங்கை லதா (வேலைக்குச் செல்பவள்) படுக்கையில் உட்கார்ந்து கொண்டு கொட்ட கொட்ட விழிக்கக்காரணம் கேட்கிறாள்.

"இல்லக்கா ரொம்ப நாளா இப்படித்தான் பாதி ராத்திரியிலே விழிப்பு வந்தா அப்புறம் தூக்கம் வர மாட்டேங்குது"

என்ற தங்கையின் பதிலைக் கேட்டு அதிர்ச்சி அடைகிறாள், விடிந்ததும் தன்னை இரண்டாந்தாரமாகப் பெண் கேட்டு வந்த கும்பகோணத்து மாப்பிள்ளைக்கு விருப்பம் தெரிவித்து அப்பாவைக் கடிதம் எழுதச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறாள்.

கலைந்த கனவுகள் சொல்லும் இக்கதையில் முதிர்கன்னி ஒருத்தியினது பாலியல் உறுத்தல்களினால் உண்டாகும் உள்ளக் குமுறல்களையும், அடிமன வெளிப்பாடுகளையும் காணலாம் தன்னுடைய சம்மதத்திற்காகக் காத்திருக்கும் வயதான நோயாளி அப்பாவிற்குத் தனது ஒப்புதலைத் தெரி-விக்கத் தயாராகிறாள் கதாநாயகி, தன்னைப்போல் தன் தங்கையும் பாலியல் கோளாறுகளுக்கு ஆளாகி விட்டிருப்பாளோ என்கிற ஐயப்பாட்டுணர்வு அவளுடைய குழப்பத்தைத் தீர்த்துத்-தெளிவடையச் செய்கிறது தங்கையின் வாழ்விற்குத் தடையாக இருக்கிறோமா? என்கிற எண்ணமே தேவகியின் ஒப்புதலுக்கு அடிப்படை. அதனை நாகரிகமாகவும் நயமாகவும் குறிப்பால் உணர்த்தியிருக்கிறார் ஆசிரியர். சிறுகதை வெளிப்படையாகச்-செய்திகளைச் சொல்வதைக் காட்டிலும் குறிப்பாக உணர்த்து-வதே சாலச்சிறந்தது என்பாரின் கூற்றிற்கு மதிப்பளிக்கிறது இந்தச் சிறுகதை.

சிவராமனுடைய தம்பி தேங்காய்ப் பறிக்க மரத்தில் ஏறித் தவறிவிழ, இடுப்பில் அடிபட்டு விட்டது அவனை டாக்டரிடம் காண்பித்து அவரது ஆலோசனையின்படி 'எக்ஸ்ரே' எடுப்ப-தற்குச் சிவராமனிடம் பணம் இல்லை, பணத்திற்காக நண்பர்-களிடம் அலைந்து ஒரு நண்பர் தந்த நூறு ரூபாயை வீட்டில் வைத்திருந்தான், போதாதென்று கருதி இன்னொரு நண்பரிடம் சென்று நூறு ரூபாய் கடன் கேட்க, அவன் மாலையில் தருவதாக நம்பிக்கை ஊட்டினான் அந்த நம்பிக்கையோடு வீட்டிற்குத் திரும்பி வந்து சாப்பிட்டுப்படுத்தவன் அலைச்சலினால் ஏற்பட்ட அசதியில் சற்று அயர்ந்து விட்டான், தெருவில் வந்த

குடுகுடுப்பைக்காரனின் குடுகுடுப்பை ஒலியைக் கேட்டு விழித்தான் குடுகுடுப்பைக்காரன் சிவராமன் வீட்டிற்கு வந்து 'நல்ல காலம் பொறக்குது' என்று நம்பிக்கை வார்த்தைகளைக்-கொட்டிக் கொஞ்சம் சோறு கேட்டான் சிவராமன் சோற்றுக்குப் பதிலாக ஐம்பது பைசாவைக் கொடுக்க. அவன் வீட்டிற்குள் வந்து உட்கார்ந்து சிவராமனை எதிரில் உட்காரச் சொல்லி ஊதுபத்தியைக் கொளுத்தி மந்திரிக்கத் தொடங்கினான். பின்னர்ச் சிவராமனிடம் இருபது ரூபாய் கேட்டான். சிவராமன் கடன் வாங்கி வைத்திருந்த நூறு ரூபாய் நோட்டைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தான். அதை வாங்கி மடித்துச் சிவராமன் கையில் கொடுத்து மூடிக் கொள்ளச் சொன்னான் குடுகுடுப்பைக்காரன் சிவராமன் பயபக்தியோடு அவன் சொன்னபடியெல்லாம் செய்தான் குடுகுடுப்பைக்காரன் சொல்வதைத் திருப்பிச் சொல்லச் சொன்னான், சிவராமன் சொன்னான் ,-

> இன்னியோட எனக்கு எந்த கொறையும் வராது. நெனச்ச காரியம் கைகூடும், நெறயா பணம் வரும். வியாபாரம் விருத்தியாகும். அப்படி வந்தா ...என்னை நெனக்கிற மாதிரி இந்த பொட்டலத்துல உள்ள பணத்துல பாதிய, இப்ப இந்த சாமிக்கு காணிக்கையா கொடுக்கிறேன்னு சொல்லு... எங்க கொடுக்கிறியா ? கொடுக்கிறியா ? சொல்லு,ம்ம்னு சொல்லு...

'ம்' என்ற சிவராமனுக்குப் பொறிதட்ட விழித்துக் கொண்டான், அவன் உள்மனம் எச்சரிக்க, 'கொடுக்க மாட்டேன்' என்று கையைப் பிரிக்காமல் உதறி எழுந்தான். இவ்வாறு பணம் புரட்டுதலில் உள்ள கடினத்தையும் பணம் பறிப்பதில் உள்ள எளிமையையும் கதை நன்கு துலக்குகிறது. 'நல்ல காலம் பொறக்குது' என்னும் கதையில் வாழ்க்கைப்-போரட்டங்களின் தொடர்ச்சியில் சரிந்து வீழ்ந்து உருக்குலைந்து திண்டாடிக் கொண்டிருக்கிற ஒரு மனிதனை, மந்திர தந்திரங்-களைச் சொல்லி மிக எளிதாகப் பணம் பறிக்க எண்ணுகிறான் இன்னொரு மனிதன், இரண்டு மனிதர்களுடைய வாழ்க்கை நடப்புகளைக் காட்டி, ஏமாறுகிறவன் விழித்துக் கொண்டால் ஏமாற்றுகிறவனின் திட்டம் தவிடுபொடியாகும் என்கிற வாழ்வியல் உண்மையைப் புலப்படுத்துகிறார் சத்திய சந்தன் குடுகுடுப்பைக்காரனுடைய வாக்குப் பலிதத்திற்குப் பயப்படும்

காலம் மலையேறி விட்டாலுங்கூட இன்னும் எங்காவது ஒரு மூலையில் அவனது குடுகுடுப்பைச் சத்தம் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறது. அதற்கு இக்கதை ஒரு சான்று.

சத்திய சந்தனின் சிறுகதைகள் மன உணர்வு, மனித உணர்வு ஆகிய இரு வண்ணங்களின் கலவைகொண்டு வரையப் பெற்ற வாழ்க்கைச் சித்திரங்கள்; அச்சித்திரங்களின் மெய்ப்பாடுகள் வாசகர்களுடைய மனங்களை வெகுவாக வருடுகின்றன. பொழுது போக்கிற்குப் பார்த்துவிட்டுக் கழித்துவிடாமல் இருக்க மனங்களில் பசையாய் ஒட்டிக் கொள்கின்றன; சிந்திக்க வைக்கின்றன; குறிப்பு நுட்பத்தால் கலைப் படைப்புக்களை வசீகர மிக்கவையாக்குகின்றன ச. கணேசன் என்கிற தொழிலாளியினது கைகள் இயந்திரக் கலப்பையைப் பிடித்தாலும் சத்திய சந்தன் என்னும் பெயரில் எழுதுகோலையும் லாவகமாக பிடித்துக் கருத்துவளம் நிறைந்த கதைகளையும் எழுதும் என்பதற்கு இந்நான்கு கதைகளே போதும். ஆனால், அவருடைய வளர்ச்சிக்கு - பயிற்சிக்கு-பங்களிப்பிற்கு இன்னும்பல சிறுகதைகள் எழுதப்படவேண்டும். ஆமை வேகமாயினும் முயலை வென்ற சாதனை நமக்குத் தெரிந்ததுதானே! சத்திய சந்தனின் சொற்-சித்திரத்தைப் பாருங்கள்!

> உத்திரத்தின் மேல் தடிமனான இரும்புச் சங்கிலியால் தன்னைக் கட்டியிருப்பது போல் தெரிந்தது தேவகிக்கு. இப்படிப் பல நாட்களாகத் தன்னைக் கட்டியிருப்பதுபோல் தெரிந்தது. தன்னை யார் இப்படிக் கட்டிப்போட்டவர்கள் என்று அவளுக்குத் தெரியவில்லை. பெரிய கறுப்பு உருவம் தன்னிடம் நெருங்கி வருவது போல் தெரிந்தது தலையில் பெரிய கொம்புகளுடன் யானைத்தந்தம் போன்ற பற்களுடன் அந்த உருவம் நெருங்கி வந்ததுதான் ஆபத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்த தேவகி, 'காப்பாற்று... காப்பாற்று' என்று கூக்குரல் இடுகிறாள். அந்தக்குரல் வீட்டைக் கடந்து, மரம் செடி, கொடி, கோயில், குளம், ஆகாயம் என்று ஒலித்தது. உதவிக்கு யாரும் வரவில்லை. ஏன்? உலகில் மனிதர்கள் யாரும் இல்லையா? கத்திக்-கத்தித் தொண்டைக்குழி வறட்சியாகிறது 'தண்ணி, தண்ணி...' என்று கத்துகிறாள். அந்தச் சமயத்தில் ஏதோ ஆலயமணிபோல் டாண்...டாண் என்று சப்தம் வருகிறது. "ஆ...பரிச்சயமான சப்தமாய் இருக்கிறதே!" என்று உடலை அசைத்துத் திரும்புகிறாள் தேவகி.
>
> (-கலைந்த கனவுகள்)

தொடரும்

# புதிய தொல்காப்பியம் என்னும் புற்றுநோய் !

முனைவர். பா. இறையரசன்
185, அஞ்சல் குடியிருப்பு,
தஞ்சாவூர் - 613 006.

தமிழ் நாட்டில் தமிழனாய்ப் பிறந்தாலனே தமிழை இழிவு செய்யும் கொடுமையும், தமிழனையே காலை வாரிவிடும் இரண்டகமும், தமிழனுக்கே குழிதோண்டும் பகைமையும் பல காலமாய் உள்ளனவே, தாமே பெரும் அறிவாளி என்ற தலைச் செருக்கும், சிறிது அதிகம் கற்றுவிட்ட ஆணவமும், ஆங்கிலக் கல்வியால் தவறாய்க் கோட்பட்ட போலிமையும், முரணான புதிய கருத்துக்களைச் சொன்னால் தன்பேர் வெளிப்படும் என்ற கல்வி ஆசையும், ஏதேனும் எலும்பு கிடைக்காதா என்ற பொறுக்கித் தன்மையும், செல்வரிடம் அவரைப் புகழ்ந்து அதுவும் போதாதபோது அவர்களுக்குப் பிடித்தமானவற்றைப் பற்றிப் புதுமையாகக் கூறித் தாம் அறிவாளி என்று அவர்களிடம் நிலை நாட்டிக் கொள்ளும் ஆர்வமும் கொண்ட புல்லுருவிகள்-இனக் கோடரிகள்—இத்தகு கேடுகளைச் செய்து வருகின்றன.

தமிழ், தமிழினம், தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய செயல்களைச் செய்யும் மக்களும் அவ்வாறு செய்யத்தூண்டும் கட்சிகளும் நிறுவனங்களும் தலைவர்களும் தமிழ்நாட்டில் அற்றுப்போய்விட்ட அல்லது குறைந்து போய்விட்ட சூழலில் இன்று நம்மிடையே இதற்குக் கழுவாய் தேட-மாற்றுவழி நாட-அவ்வப்போது கருத்துக்கள் பல கூறப்படுகின்றன. தமிழில் புதிய புதிய சிந்தனைகளைத் தரவேண்டும் என்று கூற்றவர்கள் சிலர் முயல்கின்றனர் புதிய தமிழ் அறிவியல் நூல்கள் வேண்டும் புதிய தமிழ் இலக்கணம் செய்ய வேண்டும், தமிழ் எழுத்துச் சீர் திருத்தம் வேண்டும், தமிழிசைவேண்டும், தமிழ்க்கணிப்பொறி வேண்டும். பெண்கள் முன்னேற்றம் வேண்டும் என்றெல்லாம் பலர் கூறிவருகின்றனர். இவர்களில் பலர் உண்மையை உணராமலும், உள்ளொன்று வைத்தும், உண்மை எது என்று புரியாமல் குழம்பியும், பிழையை உண்மையென்று தவறாகக்-கொண்டும்-பேசியும் எழுதியும் வருகின்றனர்.

தமிழ் இலக்கண இலக்கியங்கட்கு உரை செய்தோர் இவ்வாறு சில தவறல்களை முன்னரே செய்துள்ளனர் சில உரையாசிரியர்கள் தமிழில் உள்ள எல்லாக் கருத்துக்களும்

வடமொழியிலிருந்து வந்தவை என்று எழுதினர் கலைஞர்-களும் தெலுங்கர் ஆட்சியைத் தொடர்ந்து தமிழிசையைக் கைவிட்டுத் தெலுங்கு இசையை வளர்த்தனர், தமிழ் நாடகம் மறக்கப்பட்டது. நல்ல தமிழில் தனித்தமிழில் எழுந்த ஆழ்வார் பாடல்களுக்கு வடசொல் கலந்த 'மணிப்பிரவாள' நடையில் உரை எழுதினர் கிரந்த எழுத்துக்களைக் கலந்தனர். இந்-நிலை தொடர்ந்தது வரலாற்றாசிரியர்கள் தமிழக வரலாற்றை ஆரிய நாகரிகத்திலிருந்து தொடங்கினர். தமிழ் எழுத்துக்களை நாகரி எழுத்துக்களிலிருந்து வந்ததாகக்கூறினர். கால்டுவெல் எழுதிய பிறகும் 'திராவிட' கட்சிகள் வாக்கோலை வேட்டைக்-காகத் தமிழ்ப் பெருமை பேசியும் தென்னக மொழிகள் தமிழின் கிளை மொழிகள் என்று வாய் திறக்கவும் வழி இல்லை. ;கோயில் களில் தமிழ் இல்லை, நீதிமன்றங்களில் தமிழ் இல்லை, அரசு அலுவலகங்களில் தமிழ் இல்லை, மேனிலை–அறிவியல் கல்விக் கூடங்களில் தமிழ் இல்லை என்பவற்றோடு மழலையர் பள்ளி களிலும் தமிழ் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களே தம் பெயரையும், தம் வீட்டுப் பெயர்களையும், தம் கையெழுத்தையும் தம் பிள்ளைகளின் கல்வியையும் தம் நிறுவனங் களின் கடைகளின் பெயர்களையும் தமிழாகக் கொள்ளாமல் இருக்கின்றனர்.

வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றிலும், நடுவண் அரசிலும், அரசு அலுவலகங்களிலும். தேசிய நீரோட்டக் கட்சி களிலும் உள்ளோர் தமிழ் நலம் பற்றிப் பேசவே அஞ்சுவதோடு தமிழுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கூறுவோரை இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரிகளாகவும் குறுகிய வட்டங்களாகவும் குறை கூறி ஒதுக்கி ஒதுங்கிக் கொள்கின்றனர். தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகளாரின் பெயரில் அமைந்த 'மறைமலை நகர்' தொடர்வண்டி நிலையப்பெயரை 'காமராஜ் நகர்' என்று மாற்ற முற்படும் நிலையை எதிப்போர் குறைவாக உள்ளனர். 'காமராசரும் பச்சைத் தமிழர்தானே' என்போரும் இங்கு உண்டு தமிழனை விட்டே தமிழனை மோதச் செய்யும் உள்வீட்டு இரண்டகம் இங்கே வேலை செய்கிறது. மாபெரும் தலைவர் காமராசர் என்று போற்றுவது உண்மையெனில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் என்ற பெயரில் 'மதுரை ஏன்' என்பதை வினவ வேண்டும். வங்காளத்தில் நடைபெற்ற உலகப்படவிழாவுக்குச் சிவாசி கணேசன் அவர்களைத் தலைமையேற்க அழைத்துப் பின் வரவேண்டாம் என்று இழிவு செய்த பின்னும் தமிழ்த் திரை-யுலகத்தினர் சென்றுள்ளனர்.

பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் என்று தமிழ்ப் புலவர்கள் பெயராலும் தமிழின் பெயராலும் அமைந்த பல்கலைக் கழகங்கள் தமிழில் அலுவல்களைப் பின்பற்றுவதில்லை; ஆங்கிலத்தில் கருத்தரங்குகளை நடத்துகின்றன; தமிழில் விண்ணப்பங்கள், படிவங்கள், பட்டங்கள் வழங்குவதில்லை. தமிழ் இதழ்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் உள்ளன; ஆங்கிலச் சொற்களும் ஆங்கில எழுத்துக்களிலேயே அமைந்த சொற்றொடர்களும் தமிழ் இதழ்களிலும் கதை நூல்களிலும் பெருகியுள்ளன. தமிழ்ப் பல் கலைக்கழகத்தில் இராசராசன் சிறப்பு(விருது)பெற்றுக் கொண்டு அதே மேடையில்'தமிழர்கள் குறுகிய மனப்பான்மையைக் கை விட்டு இந்தி படிக்கவேண்டும்'என்று தமிழ் எழுத்தாளர் ஒருவர் கூறினார்.'தமிழ் எனக்குத்தெரியாது,தமிழுக்கு என்னைத்தெரியும் என்பதைவிடத் தமிழைப் பிழையறக் கற்றுப் பின்னர் படைப்பி-லக்கியம் செய்ய முற்பட வேண்டும், புதுக்கவிதை எழுதுவோர் பலர் ஆங்கிலமும் பிறமொழியும் கலந்து தமிழுக்குக் கேடு சூழ்ந்து வருகின்றனர்.

'தீக்குறளைச் சென்றோதோம்' என்ற திருப்பாவை அடிகளுக்குத் திருக்குறளை ஓதமாட்டோம் என்று காஞ்சி ஆச்சாரியார் ஒருமுறை கூறினார். கடவுள் மறுப்பும் பகுத்தறிவும் பேசும் சிலர் திருக்குறளைக் குறை கூறினர். பெண்கள் விடுதலை பற்றிப் புதுமையான கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் எழுத்தாளர் திருமதி இராசம் கிருட்டிணன் அவர்கள் திருக்குறளைத் திருத்தி வெளியிடவேண்டும் என்றார். புதுமை வேட்கையில் அதிகம் வெறிகொண்ட பெண் எழுத்தாளர் சிலர் ஆண்மை மதியாமலும் இழிவு செய்தும் எழுதி வருவதோடு பல ஆடவருடன் உறவுவேண்டும், தேவதாசிமுறை வேண்டும் என்றெல்லாம் எழுதி வருகின்றனர்.

'இலக்கணக் கொத்து' என்ற தமிழ் இலக்கண நூல் செய்த சுவாமிநாத தேசிகர் அந்நூலில்,

"ஐந்தெழுத்தால் ஒருபாடையும் உண்டு என
அறையவும் நாணுவர் அறிவுடையோரே
தமிழ் நூற்களவிலை அவற்றுள்
ஒன்றே ஆயினும் தனித் தமிழுண்டோ"

என்று தமிழ் இலக்கண நூலிலேயே தமிழை இழிவு செய்து -கேலி செய்து எழுதியுள்ளார். இதைப்போலத் தொல்காப்பியம் என்னும் நூல் வெளியிட்டுப் பகீரதன் தமிழ் இலக்கண மரபையும் தமிழ்ப் புலவர்களையும் அறிஞர்களையும் இழிவுசெய்துள்ளார். சத்திய கங்கை என்னும் இதழில் பகீரதன் பெயரில் வெளிவந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு இப்போது இராமலிங்கம், பகீரதன் இருவர் பெயரில் வெளிவந்துள்ள இந்நூலை இராமலிங்கர் நற்பணி மன்றத்தின் சார்பில் பொள்ளாச்சி மாகலிங்கம் வெளியிட்டுள்ளார்.

இந்நூலில் தொல்காப்பியத்தை எழுதியவர் தொல்காப்பியர் அல்லர்; அகத்தியர் என்று கூறப்பட்டுள்ளது. தொல்காப்பிய நூற்பாக்களைத் திருத்தியும் மாற்றியும் திரித்தும் அமைத்துப் புதியதும் முரணானதும் தவறானதும் ஆகிய விளக்கங்களும் இந்நூல் முழுதும் உள்ளன. திருக்குறள் பாக்கள் சிலவற்றையும் திருத்தி இந்நூல் வெளியிட்டுள்ளனர். இந்நூல் செய்யும் தவறுகளையும் முரண்பாடுகளையும் இழிவுகளையும் விரித்துப்பேசித் திறனாய்வு செய்வதுகூட அருவருக்கத்தக்கது என்பதால் இவண் ஒதுக்கப்படுகிறது. இந்நூலில்

> “பொதுவாகப் புலவர்கள் வயிற்றுக்காக வாழ்பவர்கள்.
> விலங்கு வாழ்க்கைக்கே முக்கியத்துவம் அளித்தவர்கள்,
> அளித்து வருபவர்கள். அவர்களின் அறியாமையை எண்ணி
> வருந்துவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்”

என்று பகீரதன் எழுதியுள்ளார்.

அச்சில்காணஏதேனும் இதழ்கிடைத்துவிட்டாலோ ஒன்றிரண்டு தெருக்கதைகளை எழுதிப் பாராட்டுப் பெற்றுவிட்டாலோ சில பேருக்குத்தலைகால் புரிவதில்லை. தமிழ்அறிஞர்கள் எல்லோரும் பரந்த விரிந்த உலக அறிவற்றவர்கள் என்பதாக மதிப்பிட்டுத் தம்மை மாபெரும் அறிவுக் கொழுந்துகளாக கொழுப்புகளாக கருதித் தம் மனம் போன போக்கில் தமது மதப்பற்றாலும் ஒரு சார்புத் தன்மையாலும் பிறழ - திரிபுற - உணர்ந்த பிழையாலும் தவறான கருத்தைப் பரப்பச் சிலர் முற்படுவதுண்டு. திருக்குறளைத் திருத்த முற்பட்ட ஆங்கிலக் கிருத்துவக் குருமாரை (பாதிரியாரை)யும் நன்னூலைச் சுருக்கியவரையும் தியாகராச செட்டியார் கண்டித்துள்ளார். வில்லிபுத்தூராழ்வாரும் ஒட்டக்கூத்தரும் பிள்ளைப் பாண்டியனும் காதறுத்தும் தலைவெட்டியும் தலையில் குட்டியும் தண்டித்தது போல் இக்கால் தலைமை சான்றார் இலராயினர். ஆயினும் பாவலரேறு பாலசுந்தரனார், முனைவர் அ. மா. பரிமணம், இலக்கணப்புலி கோபாலையர் ஆகியோர் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடந்த தொல்காப்பியக் கருத்தரங்கில் கடுமையாகக் கண்டித்து எதிர்த்துள்ளனர்; இந்நூலைத் தடை செய்யவேண்டும் என்று கூறியுள்ளனர். தமிழ்நாட்டில் தமிழுக்கு எதிராக எதுவும் செய்யலாம் என்பதைத் தடுப்பதே தகுதி.

சென்ற இதழ் தொடர்ச்சி

# சிலப்பதிகாரத்து இசையிலக்கணம் அரங்கேற்று காதை

டாக்டர். **வீ. ஜீ. கிருஷ்ணமூர்த்தி**
B-3 கம்பர் தெரு'
திருநகர், மதுரை - 625 006

## கிளை, நட்பு, பகை, இணை நரம்புகள்

ஒவ்வொரு சுரத்திற்கு இணை, கிளை, பகை, நட்புச் சுரங்கள் உண்டென்றும், இவை கண்டு பண் நிரல் அமைக்கப்பட வேண்டு மென்றும் நூல்கள் கூறுகின்றன. ஏழு சுரங்களில் ஒவ்வொரு சுரத்திற்கும் மற்றொரு சுரம் இணையாகவோ, கிளையாகவோ) பகையாகவோ, நட்பாகவோ இருக்கும். இவை ஒவ்வொன்று பற்றியும் இனிக் காண்போம்.

## கிளை நரம்பு

கிளை ஐந்து நரம்பென்றும் (அடியார்க்கு நல்லார் மேற்கோள்) ஐந்தாம் நரம்பென்றும் (சிலப் : உ.வே சா. உரை, பக்.220 கூறப்பட்டுள்ளது.

சுரங்களில் முதலில் தோன்றியது தாரம். தாரத்தினின்று ஐந்தாவது நரம்பாகத் தோன்றியது உழை. உழை என்பது அருகில் அமைவது, பெருக்கத்தை ஏற்படுத்துவது என்ற பொருள் களில் பெயரிடப்பட்டு "நி"யினருகில் தோன்றி அமைந்த இவ்வுழை கிளைச் சுரங்களைப் பெருகச் செய்ததால் உழையினை அடுத்துத் தோன்றியவை கிளைச் சுரங்கள் எனக் கருதப்பட்டு, இக்கிளைச் சுரங்கள் சபரிதக ஆகிய ஐந்து எனக் கூறப்பட்டது.

"கிளையெனப் படுவது கிளக்குங் காலை
குரலே இளியே துத்தம் விளரி
கைக்கிளை யெனவைந் தாகு மென்ப"
(அடியார்க்கு நல்லார் மேற்கோள்,
பொருட்டொகை நிகண்டு 346)

சுரங்கள் நிமசபரிதக எனும் வரிசையில் தோன்றினாலும், சுர நிரலை அமைக்கும்போது ஐந்து கிளைச் சுரங்களில் முதலாவ தாகத் தோன்றியது குரலாதலால் அதனை முதற்சுரமாக்க்

கொண்டு, அதனை அடுத்துத் தோன்றிய கிளைச் சுரங்களை ஐந்தாவது இடங்களில் நிறுத்தி நி, ம எனும் சுரங்களை அதனதன் இடத்தில் பொருந்தச் செய்து, சரிகமபதநி எனும் நிரல் பெறப்பட்டது.

| ச | ரி | க | ம | ப | த | நி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 7 | 2 | 4 | 6 |

தவிர, சுரங்களின் ஒலியளவு அறுதியிடப்பட்டு அவற்றின் அலகளவுகள் காணப்பட்டபோது நிசரி மபக எனும் சுரங்கள் ஒரே அலகு இடைவெளிகளின் பின் அமையாததால் நிசரிகமபத எனும் நிரல் இசைகொள்ளும் முறையில் அமைந்ததல்ல என்றும், சரிகமபதநி எனும் வரிசையில் சரிக எனும் சுரங்களும் பதநி எனும் சுரங்களும் ஒரே அளவு இடைவெளிகளின் பின் அமைந்து வருவதால் கிளைச் சுரங்கள் இவ்வாறு அமைந்து வருவது ஏழிசை வரிசை எனக் கொள்ளப்பட்டது. இக்கிளை நரம்புகளின் ஒலி முறையே நின்ற நரம்புகளின் ஒலியுடன் ஒன்றும் தன்மை உடையது.

## நட்பு நரம்பு

“நட்பு நாலாம் நரம்பெனப் படுமே” எனப் பொருட்டொகை நிகண்டு (348) கூறுகிறது.

எந்த நரம்பிற்கு மற்றொன்று கிளையோ (ஐந்தாவது நரம்போ) அக்கிளை நரம்பிற்கு முதலில் குறிப்பிட்ட நரம்பு நட்பு நரம்பாகும். இச்சுர உறவுகள் கீழ்க்காட்டியது போல் அமையும்

| | | கிளை | | நட்பு |
|---|---|---|---|---|
| நி | → | ம | → | நி |
| ச | → | ப | → | ச |
| ரி | → | த | → | ரி |
| க | → | நி | → | க |
| ம | → | ச | → | ம |
| ப | → | ரி | → | ப |
| த | → | க | → | த |

கிளை நரம்பு, நட்பு நரம்பு என்பவை இசையின் இரண்டு முறையான நிரல்களைப்பெற்று அவ்விருமுறை நிரல்களிலும் நரம்புகள் அமையவேண்டிய முறைப்படி உள்ளனவா எனக் காண்பதற்காக ஏற்பட்டவை. இதன் விளக்கம் பின்னர் கொடுக் கப்பட்டுள்ளது. கிளை நரம்புகளின் தன்மைபோல நட்பு நரம்புகளும் நின்ற நரம்புடன் ஒன்றி ஒலிக்கும் தன்மையதாகவும் ஒரே அலகு இடைவெளிகளின் பின் அமைவதாகவும் இருக்கும்.

நரம்புகளைக் கிளை என்றும் நட்பு என்றும் வகுத்ததன் உட்பொருள் காண்போம்.

இசையில் இருவகை நிரல்கள் பயின்று வரப்படுகின்றன அவை ஷட்ஜக் கிராம முறை நிரல், மத்திமக் கிராம முறை நிரல் என இக்காலம் கூறப்படுகின்றன. இவற்றினின்று முறையே ஷட்ஜக் கிராமப் பண்கள் / நிறங்கள் மத்திமக் கிராமப் பண்கள் நிறங்கள் ஆகியவை அமையும்.

ஷட்ஜக் கிராம முறையில் கிளை நரம்புகளாகிய ஐந்தாவது சுரங்கள் ஒன்றிய ஒலியையும், நின்ற நரம்பினின்று சமமான அலகு இடைவெளிகளையும் பெற்றிருக்கும். இவ்வாறான ஒரு நிரல் ச-ப போன்ற ஐந்தாவதாகிய கிளைச்சுரங்களால் அமைவது எனக்கூறி இவை தொன்முறை இயற்கை நிரல் (இயற்கையாக அமைந்த பண் நிரலமைப்பு), கிளை முறை நிரல், கிளை முறைக் கோவை, ஷட்ஜ-பஞ்சம பாவம் (ச-ப உறவில் அமையும் நிரல்) எனவும் கூறப்படும் என்று விளக்கப்பட்டுள்ளது. கிளைச்சுரங்கள் என்பவை ஒலித் தன்மையில் பொருந்தி வருவன என்பதால் இவ்வகை நிரல் பொருந்து கிளைக் கோவை என்றும் கூறப் பட்டுள்ளது. இவ்வரிசையில் ஒரு சுரத்தின் கிளைச் சுரம் அச் சுரத்தைப் போல் ஒன்றரைப் பங்கு ஒலியுடையதாக இருக்கும். இக்கிளைச் சுரங்களின் ஒலியளவுகளும் அலகளவுகளும் கீழே காண்க.

ஒலியளவு

| | | | |
|---|---|---|---|
| ச | 270 ஒலி அதிர்வெண் எனக்கொண்டால் | ப | 405 |
| ரி | 288 | த | 432 |
| ரீ | 303 75 | தா | 455·75 |
| க | 320 | நி | 480 |
| கா | 324 | நீ | 486 |
| ம | 360 | ச | 540 |

அலகளவு

மேற்கூறிய ஒலியதிர்வெண்களின் வேறுபாட்டு விகிதத்தினடிப்படையில் சரிகமபதநி என்பவை 4324432 எனும் அலகு இடைவெளிகளின் பின் அமைவது முன்பு விளக்கப்பட்டது. இதில் ஐந்தாவது சுரங்களாக அமையும்

'ச'வும் 'ப'வும் 4 அலகு இடைவெளிகளோடும்,
'ரி'யும் 'த'வும் 3 அலகு இடைவெளிகளோடும்,
'க'வும் 'நி'யும் 2 அலகு இடைவெளிகளோடும்,
'ம'வும் 'ச'வும் 4 அலகு இடைவெளிகளோடும்.

இருப்பது காணலாம். தவிரவும் ச–ப, ரி–த, க–நி, ம-ச இவற்றிடையே உள்ள இடைவெளிகள் எல்லாவற்றிலும் 13 அலகுகளாகும்.

ச ரி க ம ப த நி ச
. 3 . 2 . 4 . 4 . 3 . 2 . 4 .

அதே போன்று இவ்வேழிசை நரம்பின் முன்னர்ப் பாகத்து நரம்புத் தானங்களும், அவற்றின் கிளை நரம்புத் தானமாகிய எட்டாவது நரம்புத் தானங்களும், பதின்மூன்று அலகு இடைவெளிகளுடன் காணப்படும்.

ச ரி ரீ க கா ம மா ப த தா நி நீ ச
. 3 . 1 . 1 . 2 . 2 . 2 . 2 . 3 . 1 . 1 . 2 . 2 .

நட்பு முறை நிரல் என்பது ஏழிசை நிரலின் முதல் மூன்று நரம்புகள் ஒவ்வொன்றும் அவற்றின் நாலாம் நரம்புகளின் ஒலியுடன் ஒன்றுந் தன்மையுடனும், ஒரே அலகு இடைவெளிகளின் பின்னும் அமைந்த நரம்புகளின் நிரலாகும். இத்தன்மை பெற்றிருப்பதால் கிளை முறை நிரல் போன்றே இந்நிரலும் பண் நிரலாகவும், பண் நிரலைத் தோற்றுவிக்கும் நிரலாகவும் அமையும் என உணர்த்தப்பட்டது. நான்காவது நரம்புகளின் ஒலி ஒன்றுவது செங்கோட்டியாழின் இளி குரலாகி வரும் சகோடயாழ் முறையில் காணப்படும். இந்நிரல் முறையில் ஒலி அளவுகள், அலகு அளவுகள் பற்றிக் காண்போம்.

## ஒலி அளவுகள்

பொருந்து கிளைக் கோவையில் கிளை நரம்புகள் ஒன்றரைப் பங்கு ஒலி அளவுகளுடன் அமைவதுபோல பொருந்து நட்புக் கோவையில் நட்பு நரம்புகள் $1\frac{1}{3}$ பங்கு (1:1.333) ஒலி அளவுடன் இருக்கும்.

| சகோடயாழ் சுரம் | ஒலி அதிர்வு எண் | சகோடயாழ் சுரம் | ஒலி அதிர்வு எண் |
|---|---|---|---|
| ச | 405 | ம | 540 |
| ரி | 432 | மா | 576 |
| ரீ | 456 | ப | 608 |
| க | 478 | த | 638 |
| கா | 486 | தா | 646 |
| ம | 540 | நி | 720 |
| மா | 576 | நீ | 768 |
| ப | 608 | ச | 810 |

நான்காவதாகிய நட்புச் சுரங்கள் முதல் சுரத்தைப் போல் $1\frac{1}{3}$ பங்கு ஒலி அதிர்வு எண் உடையது காண்க.

## அலகு அளவுகள்

| | |
|---|---|
| ப த நி ச ரி க ம | செங்கோட்டியாழ் நரம்புகள் |
| 4 3 2 4 3 2 4 | அலகு இடை வெளிகள் |
| ச ரி க ம ப த நி | சகோடயாழ் நரம்புகள் |

இங்கு நின்ற நரம்பும். அதன் நான்காவது நரம்பும் ஆகிய ச-ம, ரி-ப, க-த, ம-நி முதலியன முறையே 4-4, 3-3, 2-2, 4-4 அலகு இடைவெளிகளின்பின் அமைந்திருப்பது காண்க. தவிர இந் நான்கு நரம்புகள், அவற்றின் நான்காவது நரம்புகள் இவற்றி டையே உள்ள அலகு இடைவெளி அளவுகள் ஒன்றாயிருக்கக் காண்க.

நி – ச – ரி - க - ம – ப - த - நி
· 4 . 3 · 2 . 4 . 3 , 2 , 4 .

ச-ம=9, ரி-ப=9, க-த=9, ம-நி=9.

மேலும், சரிரீககாம முதலிய ஆறு நரம்புத் தானங்களுக்கும் அவற்றின் ஆறாவது நரம்புத் தானங்களாகிய மமாபததாநி இவற்றிற்கும் இடையே உள்ள அலகு இடைவெளிகளும் ஒரே அளவில் இருக்கக் காணலாம்.

ப - த - தா – நி - நீ - ச - ரி - ரீ - க - கா - ம
ச - ரி - ரீ - க – கா - ம - மா - ப - த – தா - நி
. 3 · 1 · 1 · 2 · 2 · 3 . 1 . 1 · 2 · 2 ·

ச-ம=9, ரி-ம=9, ரீ-ப=9, க-த=9, கா-தா=9, ம-நி=9,

இவ்வாறு ஒரு ஏழிசை நிரலின் நான்காம் நரம்புகள் ஒன்றும் ஒலியை ஏற்படுத்துவதாகவும், ஒரே அலகு இடைவெளிகளின் பின் அமைந்தும், நின்ற நரம்பிற்கும் அதன் நான்காம் நரம்பிற்கும் இடையே உள்ள அலகு இடைவெளிகள் ஒரே அளவிலும் அமைந்து வருவது அந்த நரம்புகள் நிரலில் இணையாக அமைந்து பண் நிரலாகவும், பண் நிரலை ஏற்படுத்துவதாகவும் ஆகக் கூடும் என்பது குறிக்கும். இவ்வாறு அமையும் நிரலினை வம்புறு மரபுநிரல், நட்பு முறைக்கோவை, பொருந்து நட்புக் கோவை ஷட்ஜ-மத்திம பாவம் (ச-ம உறவில் அமையும் நிரல்) என்று கூறினர்.

கிளை முறையிலும், நட்பு முறையிலும் அமையக் கூடிய நிரல்கள் இரண்டு மட்டுமே அவை சரிகமபதநி என 4324432 அலகு இடைவெளிகளோடு நிரல்படும் பொருந்து கிளைக்கோவையாகிய ஷட்ஜக்கிராம நிரலும், சரிகமபதநி என 4324324 அலகு அடைவெளிகளோடு நிரல்படும் பொருந்து நட்புக் கோவையாகிய மத்திமக் கிராம நிரலும் ஆகும்.

கிளை முறைக் கோவையிலும், நட்பு முறைக் கோவையிலும் முறையே கிளை நரம்புகளும், நட்பு நரம்புகளும் ஒன்றி ஒலிக்குமெனவும், ஒரே அலகு இடைவெளிகளோடு அமையும் எனவும் காட்டப்பட்டது. ஆயின் பகையெனக் கூறப்பட்ட

மூன்றாம், ஆறாம் நரம்புகள் (ச-க; த-ச ரி;-ம,ரி-நி போன்றவை எந்நிரலமைப்பிலும் ஒன்றி ஒலிக்காது, அலகு இடைவெளிகளும் ஒன்றாயிராது. இம்முறையில் பண் நிரல் அமைப்பது கூடாத தாகும் என உணர்த்த மூன்றாம், ஆறாம் நரம்புகள் பகை எனக் கூறப்பட்டது.

| அலகு இடைவெளிகள் | சுர நிரல் |
|---|---|
| 1. 4 3 2 4 4 3 2 | ச ரி க ம ப த நி |
| | -பொருந்து கிளைக் கோவை |
| 2. 3 2 4 4 3 2 4 | ரி க ம ப த நி ச |
| 3. 2 4 4 3 2 4 3 | க ம ப த நி ச ரி |
| 4. 4 4 3 2 4 3 2 | ம ப த நி ச ரி க |
| 5 4 3 2 4 3 2 4 | ப த நி ச ரி க ம |
| | -பொருந்து நட்புக் கோவை |
| 6. 3 2 4 3 2 4 4 | த நி ச ரி க ம ப |
| 7 2 4 3 2 4 4 3 | நி ச ரி க ம ப த |

மேற்குறிப்பிட்ட ஏழு சுர வரிசைகளில் சரிகமபதநி, பதநிசரிகம இவை இரண்டும் முறையே ச-ப முறை, ச-ம முறை நிரல்களாக நின்று பண் நிரல்கள்/மூர்ச்சனைகள் பிறப்பிக்கும் எனக் கண்டோம். மற்ற ஐந்து நிரல்களில் எந்நிரலும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது சுரங்கள் எதுவும் ஒரே அலகு இடைவெளிகளோடு அமையாதது காரணக* ஆகவே இந்நிரல்கள் எதுவும் பண் மூர்ச்சனை பிறப்பிக்கும் தகுதியுடையனவல்ல என்பது விளங்கும். எனவே முன்னோர்கள் செங்கோட்டியாழ், சகோடயாழ் முறை

* ரிகமபதநிச எனும் நிரல் இதற்கு விதிவிலக்காகும். இந்நிரலிலுள்ள ரிகம எனும் சுரங்கள் தநிச எனும் சுரங்களோடு ஒரே அலகு இடைவெளிகளின்பின் அமைந்திருப்பினும் நின்ற நரம்பிற்கும் அதன் கிளை நரம்பிற்கும் உள்ள அலகு இடைவெளி அளவு ஒன்றாயிருப்பினும், நிரலின் முதல் சுரம் (ஆதார சுருதி) நான்கு அலகோடினின்றிக் குறையோடிருப்பதாலும், இந்நிரல் கைக்கிளையாழ் என்ற முறையிலும் இதனின்று பண் நிரல் தோன்றாது என நூல்கள் கூறுகின்றன.

நிரல்களே பண் நிரலாகவோ, பண் மூர்ச்சனைகளைப் பிறப்பிக்கும் நிரலாகவோ அமையும் என்றும், வேறெந்த முறை நிரலினின்றும் பண் நிரல் பிறப்பித்தலாகாது என்றும் கூறினர். இது இணை, கிளை, பகை, நட்பு இவற்றின் முறையாலமையும் நிரல்கள் மூலம் விளக்கப்பட்டது.

## இணை நரம்பு

"ஏழாம் நரம்பிணை" எனக் கல்லாடமும்
"இணையெனப் புடுவது" கீழு மேலும்
அணையத் தோன்றும் அளவின தென்ப" எனப் பொருட்டொகை நிகண்டும் (345) விளக்குகின்றன. பொருட்டொகை நிகண்டின் சூத்திரத்தால் இணை (நரம்பு) என்பது கீழாகிய முன்னர்ப்பாகத்திலும் மேலாகிய பின்னர்ப்பாகத்திலும் அவற்றின் நடு நரம்புகளாகிய முறையே மாயவன், பலதேவன் எனப் பெயரிடப்பட்ட நரம்புகளை அளவில் ஒரே அணைந்து வரும் சுரங்களாகும் எனத் தெளிவுபடுத்தியிருப்பது அறியத்தக்கது.

பண்ணாகக் கூடிய அல்லது பண் நிரல் பிறப்பிக்கக்கூடிய நிரலினின்று பண் மூர்ச்சனையைத் தோற்றுவிக்கும் போது அம்மூர்ச்சனை இசை கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளதா என்பது அம்மூர்ச்சனையின் சுரங்களும்/சுரத்தானங்களும் நிரலில் இணையாக அமைந்துள்ளதா என்று கண்டு உறுதி செய்யப்படும். இணை காணுவதற்குச் சுரங்கள் மாயவனையும் பலதேவனையும் சார்ந்து எவ்வளவுகளில் அமைந்துள்ளன எனக் காணப்பட வேண்டும். இதனைப் பதிகம் 9-இல் காண்க. பதிகத்தில் காட்டியபடி நிரலின் முன்னர்ப் பாகத்து சுரம் / சுரத்தானமாக ச, ரி/ரீ, க/கா, ம, ப, த/தா, நி/நீ இவை நிற்கும்போது முறையே பின்னர்ப் பாகத்து சுரங்களாக ப, த/தா, நி/நீ; ச, ரீ, க/கா, ம/மா இவை நிற்கும், இவ்வாறான இணைச் சுரங்கள் ச-ப, ரி-த, ரீ-தா, க-நி, கா-நீ, ம-ச. ப-ரீ, த-க, தா-கா, நி-ம, நீ-மா என்று நின்ற நரம்பினை அடுத்து ஏழாவது சுரங்களாக அமைவதால் "ஏழாம் நரம்பிணை" எனக் கல்லாடம் கூறிற்று.

"அணையத் தோன்றும் அளவின தென்ப" எனக் கூறியதால் அலகு இடைவெளிகளின் அளவு மாயவனின் இடப்புறம் உள்ள நரம்பிற்கு அமைவது போல் பலதேவனின் இடப்

புறம் உள்ள நரம்பிற்கும், அவ்வாறே மாயவனின் வலப்புறம் உள்ள நரம்பிற்கு அமைவது போல் பலதேவனின் வலப்புறம் உள்ள நரம்பிற்கும் அமையுமாறு நிரல் அமைக்க வேண்டும் என்பது விளக்கப்பட்டது.

மேற்கூறியது, கிளைமுறைக் கோவையாக அமையும் செங்கோட்டியாழ்ப் பண் நிரலின் இணை நரம்புகள் காணும் முறையாகும்.

நட்பு முறைக்கோவையாகிய சகோடயாழ்ப் பண் நிரலில் இணை என்பது நின்ற நரம்பின் நான்காம் நரம்பு மாயவனின்று எவ்வலகு இடைவெளி தள்ளி அமைந்துள்ளதோ அதே அளவில் நின்ற நரம்பானது பலதேவனிடமிருந்து தள்ளி அமைந்து இவ்வாறு இணை நரம்புகள் மாயவனையும் பலதேவனையும் அணைந்து வரும். இம்முறையில் நின்ற நரம்பும் அதன் நான்காம் நரம்பும் இணை நரம்புகள் எனப்படும். இதனையும் பதிகம் 9-ல் உள்ள வரிசைகளின் மூலம் கணக்கிட முடியும்.

பகை நரம்பு

"நின்ற நரம்பிற் காறு மூன்றுஞ்
சென்று பெற நிற்பது கூடமாகும்" (அடியார்க்கு நல்லார் மேற்கோள்)

"கூடமெனினும் பகையெனினும் ஒக்கும்" (சிலப் : உ. வே. சா. உரை பக் 232)

எனக் கூறப்பட்டுள்ளது.

பொதுவாக கிளைமுறைக் கோவை மூர்ச்சனைகளில் நின்ற நரம்பும் அதனைச் சேர்த்து ஐந்தாம் நரம்பு / எட்டாம் நரம்புத்தானம் / பதினான்காம் அலகுத் தானத்திலுள்ள நரம்பு இவை இணை எனப்படும். அதேபோல நட்புமுறைக் கோவையில் நின்ற நரம்பும் அதனைச் சேர்த்து நான்காம் நரம்பு/ஆறாம் நரம்புத் தானம்/பத்தாம் அலகுத் தானம் இவற்றிலுள்ள நரம்புகள் இணை எனப்படும்.

ஆனால், கிளைமுறைக் கோவையில் ரீ பதினான்காம் அலகிலின்றி பதிமூன்றாம் அலகிலும், நட்பு முறைக் கோவையில் ரீ முதல் ப பத்தாம் அலகிலின்றி பதினொன்றாம் அலகிலும்

இருப்பினும் இவை இணை நரம்புகளாகக் கருதப்படும். ஏனெனில் ப-ரி ஐந்தாம் நரம்பும் (கிளை) ரி-ப நான்காம் நரம்பும் (நட்பு) ஆவதால் என்க

ஆயின் கிளை முறைக் கோவையினடியாக வரும் மூர்ச்சனைகள் சிலவற்றில் மா-ரி எனும் சுரங்கள் இணையான அமைப்புள்ளது போன்ற தோற்றத்தோடு எட்டாம் நரம்புத் தானமாகவும் ப-ரீக்குக் கூறியது போல் 13-ஆம் அலகிலும் அமையும். ஆயினும் இவற்றை இணை எனக் கருதக்கூடாது. ஏனெனில் ம முதல் ரி ஆறாவது நரம்பாகிய பகை நரம்பு ஆகின்றது.

அதேபோல நட்புமுறைக் கோவையினடியாக வரும் மூர்ச்சனைகள் சிலவற்றில் ரி-மா எனும் சுரங்கள் இணையான அமைப்புள்ளது போன்ற தோற்றத்தோடு ஆறாம் நரம்புத்தானமாகவும் ரீ-பக்குக் கூறியது போல் பதினொன்றாம் அலகிலும் அமையும். ஆயினும் இவற்றை இணை எனக் கருதக்கூடாது. ஏனெனில் ரி முதல் ம மூன்றாவதாகிய பகை ஆகின்றது

இப்பகை நரம்பு, கூடம்-பொய்யானது, வஞ்சனையானது வேடமிட்டு கிளை/நட்பு போல் நின்றாலும் உண்மையான பகை அதாவது மூர்ச்சனை இசை கொள்ள முடியாதவாறு செய்யும் நரம்பமைப்பு. ஆகவே செங்கோட்டியாழ் முறையில் மா-ரி எனும் சுரத்தானங்கள் ஒரு மூர்ச்சனையில் இணையாக அமைந்தும், சகோடயாழ் முறையில் ரி-மா எனும் சுரத்தானங்கள் ஒரு மூர்ச்சனையில் இணையாக அமைந்தும் பண் நிரல்/மூர்ச்சனை அமைக்க முடியாது எனும் பொருளில் ஆறும் மூன்றும் பகை எனக் கூறப்பட்டது.

மூர்ச்சனைகள் இசை கொள்ளத் தக்கதா என அறிய அதன் கிளை, நட்பு, இணை, பகை, நரம்புகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது அறியப்படும். இது குறித்தே

> "இணை கிளை பகை நட்பென்றின் நான்கின்
> இசை புணர் குறி நிலை எய்த நோக்கி"
>
> (சிலப் : வேனிற் : 33-34)

எனக் கூறப்பட்டது.

தொடரும்

# பழமலயின் கவிதை உலகம்

தெ. திருஞானமூர்த்தி,
விரிவுரையாளர்,
க. செ. கல்லூரி.
மேலலச்சிவபுரி.

இலக்கியப் படைப்பு என்பது அனுபவங்களின் வெளிப்பாடாகும். அனுபவப் பகிர்வு தான் படைப்புக்கும் வாசகனுக்கும் இடையே உள்ள தொடர்பாகும். பழமலயின் கவிதைகளில் அவர் தம் அனுபவங்கள் நகலாக இல்லாமல் அசலாக இடம் பெற்றிருக்கின்றன. புதுக்கவிதைகளில் ஒரே மாதிரியான வடிவத்தையும் ஒத்த சிந்தனையையும் வெவ்வேறு கவிதைகளில் பார்த்துப் பழகிப்போன நமக்கு பழமலயின் கவிதைகளை அனுபவிப்பதற்குப் பொறுமையும் கூடுதல் வாசிப்பும் தேவைப் பட்டாலும் அவை நம்மில் ஏற்படுத்தும் அனுபவங்களும் சிந்தனைகளும் மிகுதி

''அனுபவங்களைக் கவிதைகளாக உணர்கிற நான் ஆள்களையும் கவிதைகளாகவே உணர்கிறேன். எனக்கு ஆள்களும் அனுபவங்களாகவே உள்ளார்கள்'' (சனங்களின் கதை. ப. 7) என்கிறார் பழமலய். இவர்தம் இக் கவிதைக் கோட்பாட்டைக் கொண்டு சனங்களின் கதை, குரோட்டன்களோடு கொஞ்ச நேரம் இவற்றை நோக்கும்போது நாம் பின்வரும் முடிவுக்கு வர நேரிடுகிறது. 'சனங்களின் கதையில் இடம்பெறும் பாத்திரங்கள் நம் இடத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் 'குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்' கவிதையில் இடம் பெறும் பாத்திரங்களை விட குரோட்டனே நம் நெஞ்சில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துகிறது

சனங்களின் கதையில் தம் மூத்த தலைமுறை பற்றியும் அத்தலைமுறையோடு தான் கொண்டிருந்த உறவு பற்றியும் பேசுகிறார் பழமலய். இவ்வகையில் இப்படைப்பு குறிப்பிட்ட காலகட்டச் சமுதாயத்தின் பண்பாட்டுப் பெட்டகமாகத் திகழ்கிறது.

''என்கொள்ளி கிடக்கட்டும்
இருந்தால்
உன்னைச் சுடும்போது
விறகுக்கும் வைகுந்தம்'' பக். 14

இவ்வாறு தாயைப் பற்றிப் பேசும் பழமலய் அவர்மீது அம்மாயி கொண்டிருந்த அன்பை,

"பழமல இருக்கானா..............?
பார்த்துட்டுப் போவ வந்தேன்
இந்தக்
குரலை எரிப்பதற்கு நெருப்பால் முடியாது". ப. 37

என்றும் புலப்படுத்தியுள்ளார்.

சமூக முரண்பாட்டின் குறியீடாய்க் கேசவன் நாட்டுப் புறத்தைப் பிரதிபலிக்கின்றான். கேசவனுக்கும் பழமலயின் மாமாவுக்கும் இடையேயான உறவு புதிரானது என்றாலும் இது நாட்டுப் புறங்களில் காணமுடியாத புதுமை இல்லை. இதனைக் கவிஞர்,

"மனிதன்
மன்னித்தும் மறந்தும் கேசவன் ஆகலாம்
மனிதனாக முடியாது". ப. 43

என விமர்சன யதார்த்தவாத நோக்கில் விளக்கியுள்ளார்.

ஆசிரியர் சபாபதி, பழமலயா, நீ பாலகிருஷ்ணா? என்று கேட்கும் கேள்வியும் ஒரு துண்டு கட்டி இருப்பியே? இது ஒங்கப்பன் கோணமா? என்ற பதிலும் நாட்டுப்புறங்களில் ஒவ்வொரு விவசாயியின் மகனும் எதிர்கொள்ளும் அனுபவமாகும்.

இப்படி சனங்களின் கதையில் இடம்பெறும் பாத்திர அனுபவங்கள் ஒவ்வொன்றும் நம் அனுபவமாக நம் தலைமுறையினர் அனுபவமாகக் கதையைப் படிக்கும் ஒவ்வொருவரும் உணர்கிறோம் இதுதான் உண்மையான அனுபவத்தில் பிறந்த கவிதைக்குக் கிடைத்த வெற்றியாகும். 'இதேபோல் குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்' கவிதையில் பேசப்பெறும் உணர்வுகள் நம் உணர்வுகளைப் போலவே தோற்றமளிக்கின்றன. நம் அனுபவங்களை நாம் கவிதையாக்குவதற்குள் பலமலய் கவிதை-யாக்கிவிட்டார் என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால் கவிதையில் பழமலயைத் தேடுவதை விடுத்து நம்மை நாம் அதில் பார்க்கிறோம்.

குரோட்டன்களோடு கொஞ்ச நேரத்தில் இடம்பெறும் இயற்கை ஈடுபாட்டின் ஊற்றுக்கண்ணை நாம் சனங்களின் கதையில் காணமுடிகின்றது. அம்மாவின் சோகம் கேட்டுக் கேட்டுக் கசந்த கீழைக்காட்டு வேம்பை அப்பா, புதிதாகக் கட்டும் வீட்டிற்காக அறுத்துக் கொள்ளலாம் என்கையில் கவிஞர் மனம் பதறுகிறார். நடவு நாள்களில் கிளைகளை இழந்து மரம் மொட்டையாய் நிற்கையில் வீட்டில் உள்ள கொடுவாள் மேல் கோபம் கொள்கிறார் பழமலய்.

கீழஓடை புளியமரம் பற்றிக் கவிஞர்,

> ''கன்னியாகத் தோற்றம் காட்டி
> தாயாக நின்ற மரம்'' ப. 57

என விளக்குகின்றார். இயற்கையைப் பிரியாத மனித வாழ்க்கை-யைக் காட்டிய பழமலய் அதனை இழக்க நேர்கையில் மனம் பதறுகிறார். குரோட்டன்களோடு கொஞ்ச நேரத்தில் செடிகள் நம்மை விட்டுப் போய் விடுமோ என்ற கவிஞரின் அச்சம் முந்தைய உணர்வின் வளர்ச்சியாகும்.

மனித உறவிலும், இயற்கை ஈடுபாட்டிலும் ஆழமான ஈடுபாடு கொண்ட கலைஞரின் நேசிப்பு எல்லைகளுக்கு அப்பாற் பட்டதாகும். மலை உடைந்து மணல் ஆகிறது; மக்கள் எரிந்து சாம்பல் ஆகிறார்கள்; எனவே அடையாளங்களின் காலம் மிகவும் குறுகியது என்று கூறும் கவிஞர், மனிதர்கள் நேயத்திற்கு அடைப்புக்குறி இல்லை என்கிறார் இதன் வளர்ச்சியாகத்தான் கவிஞரின் குரோட்டன் ஈடுபாட்டையும் நாம் காணவேண்டும். சனங்களின் கதையில் மூத்த தலைமுறை யினருக்குக் கொடுத்த அழுத்தத்தை குரோட்டன்களோடு கொஞ்ச நேரத்தில் தம் வாழ்க்கை அனுபவங்களுக்கு அளித்து உள்ளார்.

குரோட்டன்சு பற்றிய பழமலயின் சிந்தனை செடி, கொடி, மலர், மரம், சுற்றுப்புறச் சூழல் என விரிந்து செல்கிறது மலர்க் காட்சிகளில் விற்பனைக்குக் கிடைக்கும் செடிகளுக்காகக் காத்திருப்பது வாழ்க்கையே பறிபோவதாக எண்ணுகிறார். குரோட்டன் வளர்ப்பில் ஈடிணையற்ற ஒரு ஈடுபாட்டைக் கவிஞரிடம் நாம் காணமுடிகிறது. மனைவி, மக்கள், உடன் வாழ்வோர் எல்லோரும் குரோட்டன் வளர்ப்பை விரும்பாவிட்டாலும் கவிஞரால் அதனைச் செய்யாமல் இருக்க இயலவில்லை வாடகை வீட்டில் நீர் பற்றாக்குறையிலும் இப்படைப்பு முயற்சி அவருக்கு இன்றியமையாததாகப் படுகிறது.

"நீரையும் அன்பையும் பொழியாமல் இருக்க
மழையாலும் முடியாது மனிதராலும் முடியாது" ப. 26

என்று கூறும் கவிஞர் தோல் மனிதரின் எல்லையாக முடியாது என்றும் என் நீட்சிகளுள் ஒன்றுதான் நான் வளர்க்கும் அழகுத் தாவரங்கள் என்றும் குறிப்பிடுகின்றார்.

குரோட்டன்களிடம் மனதைப் பறிகொடுக்கும் கவிஞரின் நேசம் அவரை நமக்குப் புதிய தோரோவாக அடையாளம் காட்டுகிறது குரோட்டன்கள் நடுவில் குடியிருக்க விரும்பும் கவிஞருக்குத் தொங்கும் பூமியும் ஒரு சிறு தொட்டியாகத் தெரிகிறது.

"தொட்டிகள் மட்டுமோ தோட்டங்கள் மட்டுமோ
அழகு வளர்க்கப் போதவே போதாது
இதற்குத்
தொங்கும் பூமியும் ஒருசிறு தொட்டி" ப. 14

என எண்ணும் கவிஞர் எதையும் நான் ஒதுக்க முடியாது புல்லுக்கும் உரிமை இந்த மண் என்கிறார்.

கவிஞரின் படைப்பில் குரோட்டன் என்பது படைப்பு மற்றும் இயற்கைக் குறியீடாக நின்று கவிதையைச் செழுமைப் படுத்துகிறது.

"நஞ்சைக்குத் தழை கழித்தபின்
கிளைகளில் விரியும் புதிய கொம்புகள்
நாட்டிய மயிலின் தோகையாய்க் காணும்" ப. 16

என்ற அவர்தம் பார்வை இயற்கையிடம் மனதைப் பறிகொடுக்கும் அவர்தம் அழகுணர்ச்சியைக் காட்டி நிற்கிறது.

பறவைகளைக் கூண்டில் அடைக்கும் கொடுமைக்கு ஒப்பானது செடிகளைத் தொட்டியில் நடுவதாகும் என்கிறார் பழமலய். தொட்டிகளை சிறைச்சாலைகளாக உணர்கிறார் கவிஞர். சிறைச்சாலைகள் எந்த வடிவத்திலும் நாகரிகம் ஆகாது என்றும், அவற்றை அனுமதிக்க முடியாது என்றும் உணர்த்துகிறார். மேலும் போர் வளர்க்கும் மக்கள் காடு வளர்க்கட்டும்,

காடுவளர்ப்பது புதிய நாகரிகம் வளர்ப்பதாய் இருக்கும் எனவும் தெளிவு படுத்துகின்றார்

''நாம் மறந்தாலும் தாம் நினைந்து வரும்
உறவினர்கள் போல
நண்பர்கள் போலக்
குரோட்டன்கள் வருகின்றன என் கனவில்'' ப.66

என்ற வரிகள் அவர்தம் குரோட்டன் ஈடுபாட்டிற்கும் படைப்-பார்வத்திற்கும் சான்று பகர்கின்றன.

தான் வைத்த செடிகள் பூத்திருப்பதைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைகிறார் பழமலய். தும்பியை விட பூ சிறப்பானது என வியக்கிறார். மழலையின் விரலில் தும்பியைப் போல் விட்டாலும் பறக்காது என்று கூறும் கவிஞர் பூவுக்கு நிறம், வடிவம் மட்டுமே அழகல்ல பூஉ என்ற அந்த ஓசையும் அழகுதான் என்று ஆனந்தக் களிப்படைகின்றார். கவிஞரின் மகிழ்ச்சியில் வெறும் அழகுணர்ச்சி மட்டுமே இருப்பதாகக் கூற முடியாது ஏனெனில் அதனை அவர் தன் உழைப்பின் வெளிப் பாடாகக் காண்கிறார். பூ வேண்டுமானால் கடையில் வாங்கிக் கொள்ளலாம் அதற்காகச் செடி வளர்க்க வேண்டாம் என்ற மனைவிக்குக் கவிஞர் கூறும் பதிலே இதனை விளக்கி நிற்கிறது.

''எல்லாரும் பெண்கள்
என்றாலும் நீஎன் உமா'' ப. 15

என்பதால் அறியலாம்.

செடிகளைத் தன் உறுப்புக்களுள் ஒன்றாகவும் நண்பனா-கவும் கருதும் பழமலய் அதனைப் பிரிகையில் நண்பனைப் பிரிந்த சோகத்தில் ஆழ்கிறார்.

''வளர்த்துப் பழகியவற்றைப் பிரிவது
சாவுதான்
பழகிக் கொள்ள வேணும்'' ப. 45

என்று வருந்தும் கவிஞர் புத்தகங்களைப் போல இவற்றையும் ஒப்படைத்துவிட்டுப் பிரியத்தான் தகுதியானவர்கள் கிடைக் கணும் என ஏங்குகிறார்.

தான் வளர்க்கும் குரோட்டன்சை மட்டும் கண்டு கவிஞர் மகிழ்ச்சி கொள்ளவில்லை. அவர் கொடுத்துப் பிழைத்துக் கொண்டவற்றையும் பார்க்க மனம் நிறைவாக இருக்கிறது என்கிறார். மனிதர்கள் மனத்தின் வளர்ச்சியில் குரோட்டன்சு தேடுவார்கள் என்று பண்பாட்டின் அடையாளமாய் குரோட்டன் சைப்பார்க்கிறார் பழமலய்.

"குரோட்டன்சு தொட்டியில வளந்தா
கொடுத்தவங்க மனசுல வளர்றாங்க" ப. 34

என்று தனக்குப் பதியன் கொடுத்தவர்களை அவர் நன்றியோடு நினைவு கூர்வது உயர்ந்த நாகரிகத்தின் உன்னத வெளிப்பாடாகும்.

வீடும்நாடும் நோய்க்கு ஆளான இன்றையச் சூழலில் குரோட்டன்சுகள் அவர் மனத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டுகின்றன சந்தைக் கலாச்சாரத்துக்குப் பலியான இன்றைய மனிதனைக் குரோட்டன்சுகள் வழி மீட்க முயல்கிறார் பழமலய்.

"நகரத்தில் பிறந்து வளர்ந்த இவர்களுக்கு
கடையில் கிடைக்காதது எதுவும் இல்லை
பால்வேண்டும் பசுமாடு வேண்டாம்
ரைஸ் வேண்டும் உழவு வேண்டாம்" ப. 12

கவிஞரின் இக்கூற்று நம் சமுதாயத்தில் செத்துக்கொண்டிருக்கும் படைப்பு மன நிலையைத் தெளிவு படுத்துகின்றது. படைப்பின் போதுதான் ஒவ்வொரு மனிதனின் ஆக்கத்திறனும் அழகுணர்ச்சியும் வெளிப்படுகின்றன. செடிகளை வளர்ப்பது அன்பை வளர்ப்பதாகும்; செடிகளை நேசிப்பது உலகை நேசிப்பதாகும்; செடிகள் மனித மனத்தைப் பண்படுத்துகின்றன என்கிறார் பழமலய்.

உடற்கோளாறுகளோடு மனக் கோளாறுகளும் பெருகி விட்ட இன்றைய சமூகச்சூழலில் உயிர்வாழ்வு துன்பமாய்க் கழிகிறது. இத்துன்பத்திலிருந்து குரோட்டன்கள் நம்மை மீட்கின்றன என்கிறார் கவிஞர்.

"நிமிசங்கள் தோறும்
பயித்தியங்களால் கிழிக்கப்படும் துணியான மனிதன்
தன்னைத் தைத்துக் கொள்ளும் முயற்சி இது" ப. 64

இலைகள் புலித்தோள்களைப் போல ஒரு இடத்திற்கு ஒன்றே விடுதலையைத் தரும் ஆற்றல் வாய்ந்தவை என்றும் சூழலின் வெறுமையை ஒரு குரோட்டனால் வெல்லமுடியும் என்றும் குறிப்பிடுகின்றார். அவை மனிதனை மனிதனாக அடையாளப் படுத்திக்கொள்ள உதவவும் செய்கிறது என்கிறார்

ஆட்சியாளர்கள் விவசாயத்தை உற்பத்தியாகக் கணக்கிட்டாலும் அதனைச் செய்யும் விவசாயியோ வெறும் உற்பத்தியாக மட்டும் அதனைச் சுருக்கிக்காணாது அதனைத் தன் அரிய படைப்பாகவும் காண்கிறான். இப்படைப்பு முயற்சியில் அவன் கணக்குப் பார்ப்பதில்லை. கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது என்பது அவனுக்குத் தெரியும் என்றாலும் அவன் அதைத் தொடர்ந்து செய்கிறான். விதைத்த நாள் முதல் அறுவடை நாள்வரை அவனுக்கும் அப்பயிருக்குமான அன்பும் உறவும், அவனுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. இந்த படைப்பு மனநிலைதான் பழமலயையும் பாதித்திருக்கிறது.

சொந்த நாட்டில் வாடகை வீட்டில் அந்நியன்போல் வாழும் மனிதனின் மனநிலையைக் குரோட்டன்சுகள் வழி வெளிப்படுத்துகிறார் பழமலய். வாடகை வீட்டில் கவிஞரோ குரோட்டன்சுகள் வளர்க்கிறார் ஆனால் வந்த உறவினரே இதையெல்லாம் சொந்தவீட்டில் வைத்துக் கொள்ளணும் என்று அறிவுரை கூறுகிறார். பாவிகள் பேச்சைக் கேட்டுக்கேட்டு உடம்பிலும் வாடகை வீட்டில்போல் அந்நியம் வள த்தேன் என்று மனம் வருந்தும் கவிஞர்,

> "வாடகை வீட்டில் இழந்த காலத்தை
> வாழமுடியாது சொந்த வீட்டில்" ப 8

எனவும் உணர்த்துகிறார்

வாடகை வீட்டில் நாம் இழக்கும் இழப்போ மீட்க முடியாத பேரிழப்பாகும் சொந்த நாட்டைப்போல சொந்தவீடும் நேசிப்புக்குரியதே.

> "மானுடத்தின் முதற்பாடல்
> சொந்தவீடு
> யாரும் தலைவைத்துக் கிடக்க விரும்பும்
> தாயின் மடி" ப. 20

எனக் கனவுகாணும் கவிஞர் வீட்டைவிட மரங்கள் தரும் நிழல் பெரியது என்கிறார்.

"வீடு நிழல் இல்லை
வீட்டைச் சுற்றிய மரங்கள் வழங்கும்
நிழல்தான் நிழல்". ப. 52

என உணர்த்துகின்றார்.

பழமலய்க்கு குரோட்டன் இன்பம் தருவது, கவலையைப் போக்குவது, வாழ்க்கையில் ஈடுபாட்டை மிகுவிப்பது என்பதோடு மட்டுமல்லாமல் அது சில அனுபவங்களைத் தரும் ஆசானாகவும் திகழ்கிறது.

"அனுபவசாலிகளோடு ஆலோசித்தேன்
செம்மண்ணுலதான் இதுங்கள வைக்கணும்
சரிதான்
அடிப்படையிலே மாற்றம் தேவை" ப. 8

என்பதைக் குரோட்டன் வளர்ப்பில் உணர்கிறார் கவிஞர். இக்கவிதையில் கவிஞர் நேரடியாகச் சொல்லும் செய்தியை விடச் சொல்லாமல் சொல்லும் செய்தியே கவிதையைப் பலமிக்கதாக்கி-யுள்ளது. இவ்வகையில் இக்கவிதை பன்முக வாசிப்புக்கும் இடந்தந்து நிற்கிறது

குரோட்டனைப் பாதுகாப்பாக வளர்ப்பதில் கவிஞர் பெறும் அனுபவம் நடப்புச் சமூக நிலையை எதிரொலிப்பதாய் அமைந்துள்ளது.

"தூக்கணாங்குருவி பணிந்து சொன்னாலும்
அதிகாரமாகத்தான் குரங்கு நினைக்கும்
..................
திமிருக்கு
அடுத்தவர் பற்றிய நினைவு வராதோ" ப. 30

என யதார்த்த நிலையைப் புலப்படுத்தியுள்ளார்

கவிஞர் செடி வளர்க்கக் கடப்பாறையால் தரையைத் தோண்டுகிறார். அங்கே நெருப்பெறும்புகள். கவிஞருக்குக் குரோட்டனைவிட எறும்பின் உரிமைதான் முதன்மையாகப் படுகிறது. ஆக்கிரமிப்பை எதிர்த்துக் கடிக்கும் நெருப்பெறும்புகளைச் சிவப்பு எறும்புகள் எனப் பெருமைப் படுத்துகிறார். இயற்கை ஈடுபாட்டில் யதார்த்தத் தளத்தை விட்டு விலகாமல் கவிதை படைத்திருக்கிறார் பழமலய்.

"களைக்கொட்டு சிறுகடப்பாரை
தோண்டிய இடத்தில் சிவப்பு எறும்புகள்
அநியாயமான ஆக்கிரமிப்பாளர்களை
எறும்புகளாலும் மன்னிக்கமுடியாது" ப. 55

என்று பாதிக்கப்பட்டவற்றின் சார்பாகக் குரல் கொடுத்துள்ளார்.

சனங்களின் கதையில் மனிதனுக்குரிய வாழைப்பழத்தைக் கடவுட்குப் படைக்கும் கருத்தற்ற செயலை,

"பக்தி பெருகி விற்பன ஆகிறதா ?
சாமிகளுக்காவது நன்றாகப் போகட்டும்" ப.70

என நகைச்சுவை ததும்பக் குறிப்பிடுகிறார் பழமலய். மேலும் இயற்கையோடு ஒட்டிய வாழ்வை மனிதன் பொருளுக்காக இழக்கையில் இரட்டிப்புத் துன்பமே வாழ்வில் எதிர்கொள்ள நேரிடும் என்பதை வாழைப்பழத்தின் வழி உணர்த்துகிறார்.

குரோட்டன்களோடு கொஞ்ச நேரத்தில் எலிகளின் தொல்லைகளிலிருந்து செடிகளைக் காக்க விரும்பும் கவிஞரின் சிந்தனை வெளிப்பாடு இயற்கைபால் அவருக்குள் ளஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது.

"பிள்ளையார் கண்டித்து எலியும் அடங்குமானால்
பெயரை மாற்றிக் கொள்ளத் தயார்
ஏதோ ஒருகணபதி விநாயகர் என்று" ப.22

குரோட்டன் வளர்ப்பு கவிஞரை கடவுட் சிந்தனைக்கு இட்டுச் செல்கிறது கடவுள் மறுப்பில் கூடக் கவிஞருக்கே உரித்தான எள்ளலும் மென்மையும் பளிச்சிடுன்றன.

சனங்களின் கதையில் வாழைப்பழம் கவிஞருக்குக் கடவுட் சிந்தனையைத் தந்தது. குரோட்டன்களோடு கொஞ்ச நேரத்தில் எலிகளின் தொல்லை அவரைக் கடவுள் பற்றிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது மொத்தத்தில் பழமலய்க்கு இயற்கை வாழ்வைக் கற்றுத்தரும் ஆசானாகத் திகழ்கிறது.

தான் கடினப்பட்டு உழைத்து உருவாக்கிய செடிகள் தனக்காக என்று மட்டும் எண்ணுகையில் அச்செயலுக்காக மனம் வெட்கப் படுகிறார் பழமலய். ஏனெனில் தன் உழைப்புத் தனக்கானது மட்டும் என்பது ஒருவகையில் விலங்குக்குணமாகும் நான் எனக்காகவும் மற்றவர்களுக்காகவும் என்பதுதான்

உயர்ந்த மனிதப் பண்பாகும் இதைத்தான் குரோட்டன்சு வளர்ப்பிலும் கவிஞர் எதிர்பார்க்கின்றார்.

> "நினைத்துப் பார்க்கையில்
> உடைமை உணர்வுதான் துக்கத்தின் ஊற்று
> தோட்டம் இது
> பொதுவில் இருந்தால் திருட்டு ஏது
> ஊருக்குப் பொதுவாய் பூங்கா இருந்து
> ஆர்வலர்கள் அங்குப் பாடுபட வேண்டும்" ப. 36

குரோட்டன் கவிஞரின் பொதுவுடமை வேட்கையை அதிகப்படுத்தியிருக்கிறது பூங்கா சமுதாயத்தின் குறியீடாய் நின்று கவிதையைச் சிறக்கச் செய்கிறது.

தாவரங்கள் பறப்பனவாக இருந்திருந்தால் சூழல் இன்னும் வெறுமையாகி இருக்கும் என்று எண்ணும் கவிஞர் அவை நிலையாய் நிற்பது ஆறுதலான பெரிய விசயம் என மகிழ்ச்சி அடைகின்றார். பார்வையும் காட்சியும் இல்லாததாக இந்த உலகம் போய்விடுமோ என்று அஞ்சி செடிகளைக்கட்டிப் பிடித்து இலைகளைக் கோதுகின்றார் கவிதை எங்கே யதார்த்தத் தளத்தை விட்டுச் சென்று விட்டதோ என்று எண்ண நேரிடுகிறது ஆனால் யதார்த்தத் தளத்தைப் புறக்கணிக்கக் கூடியவரா பழமலய்? இல்லை. யதார்த்தத்தின் போதாமையில் ஏங்கும் மனத்தின் வெளிப்பாடே பீனிக்சு பறவை உயிர்த்தெழுதல் என்று சனங்களின் கதையில் கண்ட பழமலய் இதிலும் அந்நிலை பாட்டையே மேற்கொள்கின்றார். புரட்சிப்பண்பாட்டு இயக்கம் போன்ற முற்போக்கு இலக்கிய அமைப்புக்களிலும் மக்கள் கல்வி இயக்கம் போன்ற சமூக அமைப்புக்களிலும் தீவிரமாகப் பங்கெடுத்தவர் பழமலய். அந்தச் சுவடுகள் இன்னும் அழியவில்லை என்பதையே அவர் தம் கவிதைகள் காட்டி நிற்கின்றன.

> "குரோட்டன்கள் வளர்த்து
> ஈடு செய்ய முடியாதவை
> மனிதர்களால் நேர்பவை
> மனிதர்களால் தீர்ப்பவை" ப. 62

குரோட்டன் வளர்ப்பில் தன்னையே இழந்துவிடும் கவிஞர் பழமலயின் உணர்வுக்கு இரண்டைக் காரணமாகச் சுட்டலாம். ஒன்று அழகுணர்ச்சி, மற்றொன்று உழைப்பில் ஈடுபடும் ஆர்வம்.

"குரோட்டன்கள் என்னை வளர்க்கின்றனா
நான் குரோட்டன்கள் வளர்க்கிறேனா
செடிகளால் முடியுமா மனிதர்களை வளர்க்க
செடிகொடிகள் இல்லாமல் முடியுமா
மனிதர்கள் வளர" ப 66

குரோட்டன்கள் வளர்ப்பு மனதிற்கு மகிழ்ச்சியூட்டக் கூடியது; உயர்ந்த பண்பாட்டிற்கு ஆதாரமானது என்கிறார் கவிஞர். என்றாலும் மனிதனை வளர்ப்பது செடியா ? செடியை வளர்ப்பது மனிதனா ? என வினவும் கவிஞர் இயற்கையே மனிதவாழ்வுக்கு ஆதாரம் என்ற முடிவுக்கு வருகிறார்.

"பிறகு பேசலாம்
முதலில் செடியைக் கவனிக்கணும்
குடிக்க நீர் குந்த மண்" ப 66

அவர்தம் ஆழமான இயற்கை ஈடுபாடு உயர்ந்த மனித வாழ்வுக்கான ஒப்பற்ற உள்ளத்தெழுச்சியாகும்.

முடிவுகள் :

சனங்களின் கதையில் மூத்த தலைமுறையினரின் அனுபவங்களை வெளிப்படுத்தியக் கவிஞர், குரோட்டன்களோடு கொஞ்சநேரத்தில் தம் வாழ்க்கை அனுபவங்களுக்கு மிகுதியும் இடந்தந்துள்ளார்.

சனங்களின் கதையில் காணும் இயற்கை ஈடுபாட்டின் நீட்சியாகத்தான் குரோட்டன்களோடு கொஞ்ச நேரம் திகழ்கிறது

குரோட்டன் இயற்கைக் குறியீடாகக் கவிதையில் கவிஞரால் பேசப்பெறுகிறது. குரோட்டன் வளர்ப்பை அழகின் வெளிப்பாடாகச் சுருக்கிக் காணாமல் உழைப்பின் படைப்பாகக் காண்கிறார் பழமலய்

அழகுணர்ச்சி குன்றாத மனிதவாழ்வே மகிழ்ச்சியானது; மனிதன் நேசிக்கும் அழகும் அவனை நேசிக்க வைக்கும் அவன் தன் படைப்பும் உலகில் உன்னதமானவை என்கிறார் கவிஞர்

குரோட்டன் வளர்ப்பது அன்பை வளர்ப்பதாகும்; குரோட்டனை நேசிப்பது உலகை நேசிப்பதாகும்; குரோட்டன் வளமான பண்பாட்டின் செரிவான அடையாளம் என்கிறார்.

இயற்கை மனிதவாழ்வுக்கு அடிப்படை, அதனை இழப்பது வாழ்வை இழப்பதாகும் என்கிறார் மனிதநேயக் கவிஞர் பழமலய்.

# தொல்காப்பியம்-எழுத்து, சொல். புதிய உரை பற்றிய மதிப்பீடு

முனைவர். சோ. ந. கந்தசாமி,

பேராசிரியர் & தலைவர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-5

பொள்ளாச்சி அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களும் பேராசிரியர் டாக்டர் சா. மீனாட்சி சுந்தரம் அவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இக்கட்டுரை உருவாக்கப் பெற்றது 1988 ஏப்ரல் திங்களில் கோயம்புத்தூர் சத்தி நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் அருட்செல்வர் அவர்களின் முன்னிலையில் படிக்கப் பெற்றது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய முதலிரு பகுதிகளுக்கும் புதியஉரை என்ற பெயரில் எழுதப் பெற்ற உரைக்கு எழுப்பப்பெற்ற தடைகளே இக்கட்டுரையில் கொடுக்கப் பெற்றுள்ளன. எண்கள் தட்டச்சுச் செய்யப்பெற்ற உரைப்படியில் உள்ளபடி சுட்டப்பெற்றன.

## உரைமரபு

தமிழில் வழங்கிவரும் இலக்கண நூல்களில் தொல்காப்பியம் தொன்மையும், செப்பமும், விளக்கமும் ஒருங்கே அமைந்த விழுமிய பனுவலாக விளங்குகிறது. இந்நூலிற்கு முதல் உரையாசிரியர் என்று கருதப்பெறும் இளம்பூரணர் (கி பி. 1100) தம் உரையில் தமக்கு முற்பட்ட உரைகளையும் சுட்டுவதால் இந்நூலிற்குப் பண்டுதொட்டுப் பொருள் விளக்கம் செய்யும்பொருட்டு உரைகள் பல எழுந்துள்ளமை உய்த்துணரப் படும். இளம்பூரணர், நூல் முழுமைக்கும் உரை கண்டவர். நச்சினார்க்கினியரும் அவ்வாறே உரை செய்திருப்பினும் பொருளதிகாரத்தில் ஒரு சில இயல்களுக்கு அவர் உரை கிடைக்கவில்லை. சேனாவரையர், தெய்வச்சிலையார் கல்லாடர் முதலியோர் சொல்லதிகாரத்திற்கு உரை கண்டவர்கள். பேராசிரியர் பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்கும் பேருரை கண்டவர்.

பிற்காலத்துத் தோன்றிய இலக்கண நூல்களுக்கு உரை வகுத்த பெருமக்கள் தொல்காப்பியத்தையும், அதன் உரை-களையும் வேண்டிய இடங்களில் எடுத்தாண்டிருப்பதால் அவற்றின் சிறப்பு மேலும் தெளிவாகும். கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத நாவலர் தொல்காப்பியரை அடியொற்றியே இலக்கண விளக்கத்தின் பெரும்பகுதியை யாத்துள்ளார். மாதவச் சிவஞான முனிவர் தொல்காப்பியத்தைப் பெரிதும் போற்றிச் சங்கர நமச்சிவாயர் செய்த நன்னூல் விருத்தியுரையைத் திருத்தமுற விரித்து உரை விளக்கம் வழங்கியிருத்தல் உணரத்தக்கது.

புதிய உரையின் போக்கு

இதுகாறும் தொல்காப்பியத்திற்கு உரை கண்டவர்களும் விளக்கக் கட்டுரைகள் வழங்கியவர்களும் தமிழ் மரபினை நன்குணர்ந்தவர்களாகவும் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும், சங்கம்மருவிய இலக்கியங்களிலும், பின்வந்த இலக்கண நூல்களிலும் பழுத்த புலமை படைத்தவர்களாகவும் இருத்தல் யாவரும் அறிந்ததே. எனின், இப்பொழுது பொள்ளாச்சி அருட் செல்வர் ஆதரவில் அன்பர்கள் புலவர் இராமலிங்கம், பகீரதன் ஆகியோர் எழுதிய உரையை முழுமையாகப் படித்துப் பார்த்த பொழுது மேற்சுட்டிய கருத்துக்கு விலகிய நிலையில் உள்ளவர் களும் உரை காண்பதற்குத் துணிந்துவிட்டார்கள் என்ற உண்மைதெற்றெனப் புலனாயிற்று. இப்புதிய உரையாசிரியர்கள் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், ஆகிய முதலிரு பகுதிகளுக்கும் தம் மனம் போன போக்கில் தாறுமாறாக நூற்பாக்களைச் சிதைத்தும் கூட்டியும் குறைத்தும், சுருக்கியும் பெருக்கியும் புதியன புனைந்தும் நூலை விகாரப்படுத்திவிட்டார் என்பதை வேதனையுடன் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நாளில் இத்தகைய போலி உரைகளையும் மூலச் சிதைவுகளையும் கண்டிப்பதற்குப் பிள்ளைப் பாண்டியன், வில்லிப்புத்தூரார் ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களில் ஒருவர்கூட இல்லையே என்ற எண்ணம் வருகிறது. சீத்தலைச் சாத்தனாரைப் போலப் பிழைகளைக் கண்டு தலையில் குத்திக் கொள்வ-தற்கும் வலிமையில்லை. புதுமை என்ற பெயரினாலும் ஆராய்ச்சி என்ற பெயரினாலும் வெளிவரும் இத்தகைய

பொருந்தா உரைகளையும் போலிக்கருத்துக்களையும் மறுப்பதற்குத் தமிழ் அறிஞர்கள் தயங்காது முன்வருதல் வேண்டும், கால அருமை கருதி இப்புதிய உரையில் காணப்பெறும் ஒரு சில குறைகளை மட்டும் இங்குச் சுட்டுதல் சாலும்.

**சுட்டத்தக்க குறைபாடுகள்**

1. தொல்காப்பியத்தின் ஆசிரியர் அகத்தியரே என்பது இவர் கருத்து. இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இத்தகைய பொருந்தாப் புனைவுகளை எழுதாதிருப்பது தமிழுக்குச் செய்யும் தலையாய பணியாகும்.

2. தொல்காப்பியத்தின் காலம் கி. மு. பத்தாயிரம் ஆண்டு என்று எழுதியுள்ளார். இறையனார் களவியலில் வழங்கும் குறிப்புகளைக் கொண்டு தொல்காப்பியத்தின் காலத்தை ஆராய்ந்த பழமைவாதிகள் என்று கூறப்பெறும் மறைமலையடிகள், வெள்ளைவாரணனார் ஆகியோர் கூட அதன் காலம் கி. மு. பத்தாயிரம் ஆண்டு என்று எழுதத் துணியவில்லை. ஆண்டுகளுக்கு ஒரு மரியாதை கொடுக்காமல், வரலாற்றுணர்ச்சி சிறிதுமின்றிக் கற்பனை கடந்து காலக்கணிதம் செய்தல் எள்ளி நகைத்தற்குரியது.

3. தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்களில் வழங்கும் சூத்திரங்களை நூற்பா என்று வழங்குவதே தொன்று தொட்டு இன்றளவும் வழங்கிவரும் தமிழ் மரபு ஆகும். இம்மரபினைச் சிறிதும் மதிக்காது நூற்பாக்களைச் செய்யுங்கள் என்று வேண்டுமென்றே எல்லா இடங்களிலும் எழுதிச் செல்லுதல் திட்டமிட்ட தமிழ்ச் சதியாகும். இவரே விளிமரபு விளக்கக் கட்டுரைப் பகுதியில் மரபு என்ற சொல்லிற்குச் சான்றோர்கள் ஒரு பொருளை எப்படி வழங்கினார்களோ அப்படி வழங்குவது என்று கூறிவிட்டு அக்கருத்திற்கு மாறாக மரபினைச் சிதைத்தல் மாண்பாகாது.

4. ஒவ்வொரு இயலிலும் நூற்பாக்கள் வரிசையாக எண்ணப் பெற்று வருகின்றன. ஒருசில உரையாசிரியர்கள் பாடம் பயிற்றும் காலத்து விளக்கம் கருதிப் பெரு நூற்பாக்களை மிகவும் அருகிய

நிலையில் இரண்டாக அமைத்திருத்தல் உண்மைதான். ஒவ்வோர் இயலிலும் காணப்பெறும் நூற்பாக்களின் எண்ணிக்கை பல்வேறு உரைகளில் பெரும்பாலும் வேறுபடுவதில்லை. வேறுபடினும் ஒரு சில எண்களே கூடியோ, குறைந்தோ இருக்கும். எனின், இந்தப் புதிய உரையாசிரியர் ஒவ்வோர் இயலிலும் அடங்கியுள்ள நூற்பாக்களை மனம்போன போக்கில் மாற்றியும் ஏற்றியும் எண்ணியிருக்கிறார்.

| இயலின் பெயர் | இப்போதுள்ள நூற்பாக்கள் | புதிய உரையில் நூற்பாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மொழி மரபு | 49 | 36 |
| பிறப்பியல் | 20 | 17 |
| புணரியல் | 40 | 33 |
| உருபியல் | 30 | 24 |
| குற்றியலுகரப் புணரியல் | 78 | 21 |
| உயிர் மயங்கியல் | 93 | 50 |
| புள்ளி மயங்கியல் | 110 | 31 |
| தொகை மரபு | 30 | 33 |
| கிளவியாக்கம் | 61 | 41 |
| வேற்றுமையியல் | 22 | 13 |
| வேற்றுமை மயங்கியல் | 34 | 27 |
| விளிமரபு | 37 | 19 |
| பெயரியல் | 43 | 19 |
| வினை இயல் | 51 | 16 |
| இடையியல் | 48 | 12 |
| உரியியல் | 100 | 14 |
| எச்சவியல் | 67 | 18 |

மேற்சுட்டிய நூற்பா எண்ணிக்கை வேறுபாடுகளை நுணுகி நோக்கின் இப்புதியவர் தொல்காப்பியர் இப்போது இல்லை என்ற துணிவினால், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று மிகைபடி நடந்துகொண்டிருக்கிறார்

என்பது யாவர்க்கும் புலனாகும். அம்மட்டோ? முதல் இயலாகிய நூன்மரபில் வேண்டியவாறே நூற்பாக்கள் சிலவற்றை எழுதிச் சேர்த்துள்ளார்.

எடுத்துக்காட்டு

முப்பால் புள்ளி எழுத்தின் மேலும்
வலமும், இடமும் நின்று அதன் ஒலியை
அரையாய், இரண்டாய் நலிவாய்ச் செயுமே (3)

உன்னல் காலே, ஊன்றல் அரையே,
முறுக்கல் முக்கால், விடல் ஒன்று என
இடுவிரல் நொடிதரும்
இருஇமை இனம்தரும் (5)

இந்த நூற்பாவில் முதலிரண்டடிகளும் நேமிநாதம் உள்ளிட்ட பிற்கால இலக்கண நூல்களின் உரைகளில் மேற்கோளாக எடுத்தாளப்பெறும் நூற்பாலாகும். ஈற்றடிகள் இரண்டும் இவர் கட்டியவை. இவற்றில் இரு சீரடி பயின்று வருதல் காணத்தக்கது. இங்ஙனம் இரு சீரமைய இவரே நூற்பா செய்துவிட்டு உரியியல் விளக்கக் கட்டுரையில்,

''ஒரு செய்யுள் நான்கு சீர்களையாவது கொண்டு இருக்க வேண்டும். ஆனால் இந்த இயலில் பெரும்பாலான சொற்கள் இரண்டே இரண்டு சீர்களைக் கொண்டதாகவே இருக்கின்றன. அப்படி இருப்பது இலக்கண வழுவாகும்'' என்று இவரே எழுதியிருக்கும் வழுவினை இவரே செய்திருக்கிறார் என்பது அறிஞர்கள் நோக்கத்தக்கது.

என்னும், கட்டுரைவகையான் எண்ணொடு புணர்ந்த சொற்சீரடியும் வழியசை புணர்ந்த சொற்சீரடியும், முட்டிடயின்றிக் குறைவு சீர்த்தாய சொற்சீரடியும் நாற்பாவின் கண் பயின்று வருதலைப் பாஅ வண்ணம் என்று செய்யுளியலில் தொல்காப்பியர் வலியுறுத்தியிருப்பதால், உரியியலில் இரு சீரடி பயின்று வருதல் வழுவன்று என்ற உண்மையை இப்புதிய உரையாசிரியர்க்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரே நூன் மரபில்,
''இசை இடன் அருகும்
அரை அளபு குறுகல் மகரம் உடைத்தே
தெரியும் காலை
உள்பெறு புள்ளி உருவாகும்மே (15)

என்று மீண்டும் இருசீரடி அமைத்து நூற்பாவை அச்சிட்டுள்ளார். இதன்கண் மூன்றாமடியாக உள்ள 'தெரியுங்காலை' என்ற தொடர் முதலடியின் இறுதியில் (மூல நூலில்) அமைந்துள்ளது. அதனை நறுக்கி மூன்றாமடியில் நிறுத்துதற்கு இவர் காரணம் கூறவில்லை. அவ்வாறு செய்தல் பெரும் பழியாகும். இவ்வாறே 18-ஆம் நூற்பாவில் ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணலின்'' என்று மொழிமரபின் நூற்பாவை நூன்மரபில் கொண்டுவந்து நுழைத்திருத்தல் பெரும் குற்றமாகும். இத்தகைய பிழைகள் ஒன்றா ? இரண்டா ? எண்ணற்றவை. அவற்றைத் தொகுத்தால் ஒரு தனி நூலே உருவாகிவிடும். பிடிக்காத அரசுப் பணியாளர் ஒருவரை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து மகிழும் மேல் அலுவலர் போல் ஓரியலுக்குரிய நூற்பாவை வேறிடத்திற்கும் வேற்றியலுக்கும் மாற்றம் செய்து இவ்வுரைகாரர்கள் மகிழ்தல் எண்ணற்பாலது.

5. மூல நூலில் தொகை மரபு ஐந்தாம் இயலாகவும் குற்றியலுகாப்புணரியல் ஒன்பதாவது இயலாகவும் அமைந்துள்ளன. அவற்றை இவர் முறையே ஒன்பதாவது இயலாகவும் ஆறாவது இயலாகவும் மாற்றி அமைத்து விட்டார். இதுவும் ஒரு பெரும் பிழையாகும். உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல் ஆகிய வற்றில் முறையே முதலெழுத்துக்களாகிய உயிர், மெய் ஈறாகிவரும் சொற்களின் புணர்ச்சி விதிகளை விரித்துக் கூறிய தொல்காப்பியர், அடுத்துச்சார்பு எழுத்துக்களில் ஒன்றாகிய குற்றியலுகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விளக்கியுள்ளார். எனவே உயிர், மெய், குற்றியலுகரம் என்ற வரிசையில் புணர்ச்சி இலக்கணம் கூறுதல் தொல்காப்பியரின் இலக்கணத் திட்டமாகும் இதனை வலியுறுத்தும் வகையில் ஒரு சில சான்றுகளைக் காண்போம். மொழி மரபில் மொழிக்கு முதலாகும் உயிர்கள். உயிருடன் கூடி முதலாகும் மெய்கள், மொழி முதலாகும் குற்றியலுகரம் ஆகியவை மேற்

சுட்டிய வரிசைப்படி கூறப்பெற்றிருத்தல் காணலாம், (நூ. 56-67). அவ்வாறே பிறப்பியலில் முதலில் உயிர் எழுத்துக்களின் பிறப்புச்சுட்டப்பெற்றுப் பின்னர் மெய்யெழுத்துக்களும், குற்றியலுகரம் உள்ளிட்ட சார்பு எழுத்துக்களும் சுட்டப்பெற்றன உருபியலில் உயிரீறு, மெய்யீறு, குற்றியலுகர ஈறு என்ற வரிசையில் உருபுப் புணர்ச்சிக்குரிய இலக்கணம் உரைக்கப்பெற்றது. எனவே இந்த அடிப்படையில்தான் வரும் அகத்தோத்துக்களில் தொல்காப்பியர் மூவகை ஈறுகளுக்கும் இலக்கணம் கூறியுள்ளார் ஆதலின், குற்றியலுகரப் புணரியலை ஆறாவது இயலாக இப்புதியவர்கள் வைத்திருப்பது பொருந்தாது. இறுதி இயலாகத் தொல்காப்பியர் வைத்ததே பொருத்தமுடையது. குற்றியலுகர ஈற்றுச்சொற்கள் தமிழில் மிகுதி, ஆதலின், அவற்றுக்கு உரிய முதன்மை கொடுக்கும் நோக்கில் தனியியல் வகுத்துப்புணரியல் விதிகளைத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறியுள்ளார். வடமொழியில் குற்றியலுகரம் இல்லை என்பதும் தமிழிற்கே சிறப்பாக உரியது என்பதும் மாதவச் சிவஞான முனிவரின் தொல்காப்பியப் பாயிர விருத்தியால் அறியலாம்.

6. அகத்தோத்தினுள் உயிர் ஈறும், புள்ளியீறும் முடிக்கும் வழி ஈறுகள் தோறும் விரித்து முடிப்பனவற்றை ஓரோர் சூத்திரங்களினால் தொகுத்து முடிபு கூறுதல் தொகை மரபு என்ற இயலின் நோக்கமாகும். எனவேதான், தொல்காப்பியர் அகத்தோத்துக்களுக்கு முன்பும் உருபியலுக்கு முன்பும் தொகை மரபினை நிறுத்தியுள்ளார். இந்த நுட்பம் அறியாது இப்புதியவர்கள் தொகை மரபினை இறுதி இயலாக மாற்றம் செய்தது மறுக்கத் தக்கது.

7. புள்ளி என்ற சொல் ஆய்தத்தை மட்டுமே குறிக்கும் என்று இவர்கள் எழுதியிருப்பது சிறிதும் பொருந்தாது. புள்ளி மயங்கியல் என்று ஆசிரியர் பெயர்சூட்டிய இயல் மெய்யெழுத்துக்குரியது என்பதை இவர் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

8. உயிர் எழுத்துக்கள் 15 என்று இவர் எண்ணுதல் விந்தையாக உள்ளது. சார்பு எழுத்துக்கள் மூன்றையும் இவர் உயிர் எழுத்துக்களாகக் கருதியிருக்கிறார். ஆய்த எழுத்து

எவ்வாற்றாலும் உயிர் எழுத்தாகாது; எனவேதான் அதற்குத் தனி நிலை என்ற பெயரை அவிநயனார் வழங்கியிருக்கிறார் குற்றியலிகர, உகரங்கள் இயல்பான இகர, உகரங்களின் வேறுபட்ட ஒலிகள்; மாற்றொலியன்கள் (allophones) எனில், இவற்றை முதன்மை ஒலிகளுடன் இணைத்து எண்ணுதல் ஒவ்வாது.

9. நூன்மரபு விளக்கப் பகுதியில் ''அகத்தியர் தமக்கே உரிய ஆற்றல் மிக்க நகைச்சுவையுடன் கூடிய அங்கதச் செய்யுளாகவும் இந்தச் செய்யுளை (''எழுத்தெனப்படுப'' நூ.1) இயற்றியிருக்கிறார்'' என்று எழுதியிருப்பது நகைச் சுவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. அங்கதம் என்ற சொல்லின் அருமை தெரியாமல் இப்புதியவர்கள் இப்படி எழுதியிருத்தல் நகைப்பிற்குரியது. அதே பகுதியில் பக்கம் 4-இல் செய்யுள் உறுப்புக்கள் 27 என்று எழுதுதல் இவர் அறியாமைக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு.

10. 'மூன்று தலையிட்ட' என்பதால் சார்பு எழுத்துக்கள் முதன்மையானவை என்று இவா கருதுகின்றார் ஆறுதலையிட்ட தொண்டு தலையிட்ட என்பனபோல் நூல்களில் பயிலப்பெறுதல் இவர்கள் பார்வையில் பட்டிருக்குமேல் அவ்வாறு வழங்குதல் அக்காலத்து மரபேதவிர அதற்கென ஒரு தனி முதன்மை இல்லை என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

11. பக்கம் 3-இல் வாய்பாடு என்பதற்குத் தரும் விளக்கமும் அதுவே வாய்மொழி எனப்படும் என்பதும் பொருந்துமாறில்லை.

12. தொல்காப்பியத்தில் சார்பு என்ற சொல்லாட்சி இன்மையின் சார்பு எழுத்துச் சொல்லப்படவில்லை என்று இவர் கூறுவது பொருந்தாது. (ப. 5-6). ''சார்ந்துவரல் மரபில் மூன்று'' என்று வருதல் காண்க.

13. பக்கம் 6-இல் பவணந்தியை இவர் கூறும் குற்றச்சாட்டுக்கள் பொருத்தமற்றவை. மக்களாகப் பிறந்து புண்ணிய மிகுதியால் தேவராகவும் பாவம் மிகுதியால் நரகராகவும் ஆதலின் இம்மூவரும் உயர்திணை என்றார் என்பது சிவஞான முனிவர் தரும் விளக்கமாகும். உயர்திணை அஃறிணை என்பதற்கு,

''சாதிவேற்றுமை கருதி உலகப்பொருள்களை எல்லாம் உயர்திணை, அஃறிணை என இரண்டு சாதியாக வகுத்து அவ்வேற்றுமை கருதி அவற்றை ஐம்பாலாகப் பகுத்தலே எல்லா ஆசிரியர்க்கும் கருத்தாவது'' என்று சிவஞான முனிவர் விளக்குதல் சிந்திக்கத் தக்கது. சீவகாருண்ய ஒழுக்கம் உடையவர்கள் உயர்திணை என்று இவர் கூறுவது நூலெழுந்த காலத்துக் கருத்துடன் ஒத்துவராது.

14. பக்கம் 7-இல் ''வரல் என்ற வினைச்சொல்'' என்று தியிருக்கிறார். 'வரல்' என்ற தொழிற்பெயர் என்று எழுதுதல் வேண்டும்.

15. பக்கம் 8-இல் சார்பு என்ற சொல் இறைவனை மட்டுமே குறிக்கும் என்று எழுதிகிறார். இது சரியன்று. நிதானம் என்ற பொருளும் சார்தல் என்ற பொருளும் இச்சொல்லிற்குண்டு என்பது மணிமேகலை 30-ஆம் காதை உணர்த்தும். அன்றியும் தொல்காப்பியர் ''கருமம் அல்லாச்சார்பு'' என்ற நூற்பாவில் இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருண்மையில் பயிலும் கருமச் சார்பு, கருமம் அல்லாச் சார்பு என்ற இரண்டினைச் சுட்டியுள்ளார்.

16. பக்கம் 11, 18-இல் இ + அ → ஏ : உ + அ → ஓ என்று ஆகும் என்று எழுதுகிறார். இக்கருத்து பொருந்தாது. வடமொழியில் கூட அ + இ → ஏ; அ + உ → ஓ என்று கூட்டெழுத்துக்கள் தோன்றலைக் காணலாம்.

17. பக்கம் 16இல் முதலில் இருக்க வேண்டிய ஆய்தம் 13-ஆவது இடத்தில் வைத்திருப்பது பிழை என்கிறார். எல்லாஎழுத்துக்களுக்கும் ஆய்தமே அடிப்படை என்கிறார் அங்ஙனமாயின் ''அகரமுதலெழுத்தெல்லாம்'' என்ற திருக்குறளும், ''எழுத்துக்களில் அகரமாகின்றேன்''என்ற கண்ணனின் கீதையும், ''அகர முதலின் எழுத்தாகி நின்றாய்'' என்ற திருமுறையும் இக்கருத்துடைய மெய் கண்ட நூல்களும் பொய் புகல்வனவா? இவர் கூறுவதுதான் மெய்யா ? அறிஞர் உலகு சிந்திக்க.

18. பக்கம் 33இல், உலக மொழிகள் அனைத்திலும் 33 ஒலியன்களே கூறப்பட்டன என்று எழுதியிருக்கிறார். இதற்கு எந்த எந்த நூல்களை இவர் பயின்று உண்மை தெரிந்திருக்கிறார் என்பது புரியவில்லை,

(தொடரும்)

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டுகலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும் கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைத்தல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்கும் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா. ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக்கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ | 100 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ,, | 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ,, | 60 00 |
| இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ,, | 6 00 |
| கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ,, | 4 00 |
| நக்கீரர்—நாவலர் ந மு. வேங்கடசாமி நாட்டார் | ,, | 8 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே மாணிக்க நாயக்கர் | ,, | 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ,, | 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ,, | 0 75 |

### பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

| | | |
|---|---|---|
| எழுத்ததிகாரம் | ,, | 40 00 |
| சொல்லதிகாரம் | ,, | 45 00 |
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | ,, | 7 50 |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ,, | 4 50 |
| தமிழகத்திற் கதாகாலட்சேபம் [இரா. குருநாதன்] | ,, | 12 00 |

வளரும் சரித்திரம், நாட்டிய நாடகம் [இரா. குருநாதன்] இலவசம்
விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர். 613 002




Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு இளவர். பா. இறையரசன்

அவர்கள்

18/5, அஞ்சல் தெரு 4

தஞ்சாவூர் - 613006.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 3-00 | 3-50 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 36-00 | 72-00 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 250-00 | 600-00 |

வெளியிடுபவர்: திரு. ச. இராமநாதன், தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-618 002.

அச்சிடுபவர் : R. வைஜெயந்திமாலா,
லக்மி பிரிண்டர்ஸ், 1086, காக்கா வட்டாரம்,
தஞ்சாவூர்-618 009.